விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 17 புதன்கிழமை (02.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

# வவுனியா நலன்புரி முகாமிலிருந்த 15 ஆயிரம் பேரின் தகவல் இல்லை

## வவு. அரச அதிபர் பொலிஸாருக்கு அறிக்கை

(வவுனியா)

வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து 15 ஆயிரம் பேர் காணாமல் போய் இருக்கிறார்கள் என வவுனியா மாவட்ட செயலர் திருமதி சார்ள்ஸ் வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இதன் அடிப்படையில் பொலிஸார் சிறப்பு விசாரணைகளை தொடங்கியுள்ளனர். இவர்கள் தப்பி ஓடியிருக்கலாம் என இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழாக் காட்சி.

## நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்பான விளக்கக் கோவை வெளிவருகின்றது

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்பான விளக்கக் கோவை ஒன்றினை ஓகஸ்ட் மாத இறுதிக்குள் வெளியிடுவதாக ஏற்கனவே அறிவித்திருந்து அதனை அமைப்பதற்கான செயற் குழு அந்தவிளக்கக் கோவையை இரண்டொரு நாட்களுக்குள் வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசு அமைக்கும் செயற்திட்டம் தொடர்பாக தமிழ் பேசும் மக்கள் மற்றும் அனைத்துலக சமூகத்தினர் மத்தியில் எழக்கூடிய பல்வேறுவகைப்பட்ட கேள்விகள் மற்றும் ஐயப்பாடுகளுக்கு உரிய விளக்கங்கள் ஒரு கேள்வி – பதில் வடிவில் வெளிவரவுள்ளன.

இந்த விளக்கக் கோவை தற்போது இலத்திரனியல் (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனின் பெண் உதவியாளர் வெள்ளவத்தையில் வைத்துக் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் உதவியாளரான பெண் புலி உறுப்பினர் கொழும்பு வெள்ளவத்தையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடு ஒன்றிற்கு தப்பிச்செல்வதற்கு திட்டமிட்ட நிலையில் வெள்ளவத்தையிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த நிலையிலேயே அப்பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறிப்பிட்ட பெண்ணின் கணவரும் புலி முக்கியஸ்தர் என்பதுடன் வன்னியில் இடம்பெற்ற மோதல்களின் போது அவர் கொல்லப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது (14ஆம் பக்கம் பார்க்க)

## வெடிபொருள் வெடித்ததில் சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கால்வாய்க்குள் கிடந்த வெடிபொருளை எடுத்து விளையாடியபோது அது வெடித்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். மேலும் இரு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அச்செழுப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் (14ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாண சபையின் தலைநகரம் மாங்குளம்!

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

வடக்கு மாகாண சபையின் தலைநகராக மாங்குளம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இலங்கையின் வடக்கில் பெரிய நகரமாக யாழ்ப்பாணம் காணப்படுகின்ற நிலையில் சிறிய நகரான மாங்குளத்தினை வடமாகாணத்தின் தலைநகரமாக தெரிவு செய்யப்பட்டமை ஏன் என்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது;

தமிழ் மக்கள் மத்தியில் அல்லது புத்திஜீவிகள் மத்தியில் இது நீண்டகாலமான கோரிக்கையாக இருந்து வந்திருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணம் சட்டரீதியாக வெவ்வேறாக்கப்பட்ட பின்னர் வடமாகாணத்தின் தலை நகராக மாங்குளம் இருக்கும் என்று கருத்து வலுவாக ஏற்படுத்தப்பட்டுவந்தது. மாங்குளம் வடக்கின் மையப்பகுதியாக கிட்டத்தட்ட 35 டேறியால் (14ஆம் பக்கம் பார்க்க)

## உயர்பாதுகாப்பு வலயப்பகுதி மக்களின் மீள்குடியேற்றம் துரிதப்படுத்த வேண்டும்

### யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள் குடியேற்றத்தில் ஆக்கபூர்வ மான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யாழ்.மேல்நீதி மன்ற நீதிபதி இ.த.விக்னராசா, நீதி மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் கேட்டுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு சென்றிருந்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா, கடந்த வெள்ளிக்கிழமை நீதி மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்து யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பில் எடுத்துக் கூறினார். (02ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளை அகற்ற சர்வதேச உதவி தேவை

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வட பகுதியில் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடிகள் அகற்றும் பணிக்கு அனைத்துலக ஆதரவு பெருமளவில் தேவை என்று இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜப்பானில் நடைபெற்று வரும் 6–வது பசுபிக் தரைப்படைத் தளபதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் ஏற்பாட்டில் கடந்த 24–27 ஆம் திகதிவரை ஜப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோவில் இந்த மாநாடு நடைபெற்றது. இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட ஆசிய பசுபிக் பிராந்தியங்களை சேர்ந்த நாடுகளில் இருந்து 22 தரைப்படைத் தளபதிகள் இதில் கலந்து கொண்டனர்.

கண்ணி வெடிகளை அகற்றுவதற்கான இயந்திரங்களின் பற்றாக்குறையால் வன்னிப் பகுதியில் பணிகள் தாமதமடைகின்றன எனவும் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.


இதேவேளை இராணுவத் தளபதியின் வேண்டுகோளை அடுத்து வட பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபடுவதற் கான தமது ஆர்வத்தை மற்றைய நாடுகளின் தளபதிகள் வெளிப்படுத்தியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச–5)

## தப்பியோடிய 5 ஆயிரம் படையினர் சேவையிலிருந்து விலக விண்ணப்பிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர் படையில் இருந்து தப்பியோடிய 5 ஆயிரம் பேர் சேவையில்இருந்து அதிகாரபூர்வமாக விலகுவதற்கு விண்ணப்பித்துள்ளனர். படைகளில் இருந்து தப்பியோடி பின்னர் கைது செய்யப்பட்ட சில ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த அண்மையில் பொது மன்னிப்பு வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து, தப்பியோடிய படையினர் சேவையில் இருந்து முறையாக விலகிக் கொள்ளலாம் என தரை, கடல், வான் படைகள் அறிவித்திருந்தன.

கடந்த 24 ஆம் திகதி முதல் இதுவரை 3800 தப்பியோடிய தரைப் படையினர் சேவையில் இருந்த விலகிக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நாணயக்கார தெரிவித்தார். (ச–5)



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சூழ அம்மன் தேரில் திருவீதியுலா வருவதையும் பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் மற்றும் காவடி எடுத்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கோபி)

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியின் பணிப்பில் கொள்ளைச் சம்பவங்கள் குறித்த புள்ளி விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த மூன்று மாத காலத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான புள்ளி விபரங்களை, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராசாவின் பணிப்பில் யாழ். மேல் நீதிமன்றம் சேகரித்து வருகிறது.

இது தொடர்பில் தெரியவருவதாவது;

யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக அதன் புள்ளி விபரங்களை சேகரிக்குமாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராசா பணித்துள்ளார்.

இதன் முதல் கட்டமாக யாழ். அரச அதிபர் ஊடாக குடாநாட்டிலுள்ள சகல கிராமசேவையாளர்கள் மூலம் இத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இதில் யாழ். குடாநாட்டில் கடந்த மூன்று மாதங்களில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்ற இடங்கள், அப்போது கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டார்களா? கொள்ளையிடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டனவா? போன்ற விபரங்கள் யாழ். மேல் நீதிமன்றத் தினால் சேகரிக்கப்படுகிறது.

இவ்வாறு சேகரிக்கப்படும் புள்ளிவிபரங்கள் மூலம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ. த. விக்னராசாவின் விசேட உத்தரவில் யாழ். மாவட்டப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பர் என தெரிய வருகிறது. (ச-5)

## திசநாயகத்துக்கு சிறைத் தண்டனை அமெரிக்கா கடும் கண்டனம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜே.எஸ்.திசநாயகத்துக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதையிட்டு கடுமையாகக் கண்டித்திருக்கும் அமெரிக்கா, திசநாயக்கத்தின் உடல்நலத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

திசநாயகத்துக்கு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதை அறிந்து நாம் பெரும் அதிருப்தியடைந்திருக்கின்றோம் என நீதிமன்றத் தீர்ப்பு வெளியிடப்பட்டவுடன் கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உதவிப் பேச்சாளர் றொபேர்ட் வூட் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு அதனால் சுய தணிக்கையைச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இலங்கை ஊடகவியலாளர்களின் ஊடக சுதந்திரம் தொடர்பாக நாம் தொடர்ந்தும் அக்கறையுள்ளவர்களாகவே இருப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

திசநாயகத்தின் விவகாரத்தில் மேன்முறையீடு செய்யப்படுவது தொடர்பான நடைமுறைகளையிட்டும் நாம் தொடர்ந்தும் கவனத்தைச் செலுத்திவருவோம் எனவும் றொபேர்ட் வூட் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளையில் திசநாயகத்துக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருப்பதையிட்டு ஆசிய மனித உரிமைகள் அமைப்பு, இலங்கை ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு, எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு உட்பட பல அமைப்புக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன. (ச-5)

## கையடக்கத் தொலைபேசியை வைத்து பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட பெண்ணின் சடலத்துக்கு அருகிலிருந்த கையடக்கத் தொலைபேசி ஒன்றை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக் கையடக்கத் தொலைபேசியை வைத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக காணாமல் போயிருந்த ஊரெழுவைச் சேர்ந்த மகேந்திரன் ஜெயந்தினி (வயது-21) என்பவர் நேற்று முன்தினம் உரும்பிராய்ப்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். இவரது சடலம் மீட்கப்பட்ட இடத்திலிருந்த கையடக்கத் தொலைபேசியை பொலிஸார் மீட்டு, விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## உயர் பாது...

இதன் போது யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை படிப்படியாக மீள்குடியமர்த்துவது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் .

குறிப்பாக வலி. வடக்கில் மக்களை மீள்குடியமர்த்துவதன் மூலம் அங்குள்ள விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கை குடாநாட்டின் அபிவிருத்திக்கு பெரிதும் உதவும்.

எனவே மீள்குடியேற்றம் தொடர்பில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் உயர்மட்ட மாநாடொன்று ஏற்படுத்தி வெளிப்படைத்தன்மையாக குடா நாட்டு மக்களுக்கு மீள்குடியேற்றத்தில் நம்ப கத்தன்மை ஏற்படும் வகையில் அர்த்தமுள்ள தீர்மானமாக எடுக்கப்பட வேண்டும்.

**பொலிஸ் சேவையில் தமிழ் மொழி தெரிந்தவர்கள்**

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மொழி தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

**நீதிமன்றங்களின் மேம்பாடு**

யாழ்.குடாநாட்டிலுள்ள சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் மற்றும் ஊர்காவற்துறை ஆகிய நான்கு மாவட்ட நீதிமன்ற ங்களுக்கும் கட்டிடத் தொகுதி அமைக்கப்பட வேண்டும்.

அதற்கான நடவடிக்கையை முதன்மைப் படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மேற்கண்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய யாழ்ப்பாணத்திற்கு நேரில் வருமாறு நீதி மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவிற்கு அழைப்பு விடுத்தார். (ச-5)

## கொள்ளையர் கும்பலைத் தேடி யாழ்.பொலிஸார் வலை வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவரும் கும்பல் ஒன்றை, யாழ். மாவட்ட பொலிஸார் வலை வீசித் தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது; தற்போது யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதியில் இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் கும்பல் ஒன்று தொடர்பாகவும் அதன் தலைவன் தொடர்பாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களின் ஊடாகவும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றொசான் பெர்னான்டோ தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அக் கொள்ளைக் கும்பல் கொள்ளையிட்ட சில பொருள்களை மீட்டுள்ள பொலிஸார் அதனை வைத்து மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்ளைக் கும்பல் கைது செய்யப்பட்டதும் கொள்ளையிடப்பட்ட பொருட்களை மீட்டு பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிய வருகிறது. (எ-5)

## விற்பனைக் கிளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனைக் கிளை திறப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வேலணை, வங்களாவடி விற்பனைக் கிளையகத்தல தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செல்வி பொ. ஜமுனாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகம் தெற்கு பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் கலந்து கொள்வார். (ச-14)

## சொந்த இடத்தில் உசன் இராமநாதன் ம.வி.

(யாழ்ப்பாணம்)

தவசிக்குளத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதால் அனைத்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலைக்கு தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் எஸ். மனோகரன் கேட்டுள்ளார். (ச-14)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் குளங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 3.4 மில்லியன் ரூபாய் செலவில் இரண்டு சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. வடக்கின் வசந்தம் திட்டத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் பல பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தித்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இரணைமடு குளக்கட்டு அமைந்துள்ள பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனூடாக இப்பகுதியில் பல மீள்குடியேற்றங்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.அதேபோன்று வவுனியாவில் அமைந்துள்ள பிரப்பன்மடுவ ,கனக்காயகம போன்ற பகுதிகளில் சிங்கள மக்கள் மீள குடியமர்த்தப்பட உள்ளனர்.மேலும் புதிய நீர்ப்பாசன அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 103.99 மில்லியன் ரூபாய் செலவில் வறுகையாறு திட்டமும் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மேலும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 138 மில்லியன் ரூபாய் செலவில் யாழ். மாவட்டத்தில் மேலும் பல நீர்ப்பாசன, விவசாய மற் றும் சிறுபயிர் செய்கை போன்றவையும் அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல 28.66 மில்லியன் ரூபாய் செல வில் 11 திட்டங்கள் அடங்கிய உப்பு நீரை நன்னீராக்கும் பாரிய செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

**வாரம் ஒரு செய்தி**

வாராவாரம் வேதாகம அடிப்படையிலான தேவ செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் கேட்டு எழுதினால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். கிறிஸ்தவம் சம்பந்தமான ஆலோசனைகள், கேள்விகள் கூட கேட்டுப்பெற்றுக் கொள்ளலாம்.

எழுத வேண்டிய முகவரி:
S.G.M.
27, சேமக்காலை வீதி,
நாவாந்துறை.

(3301)

# இன்று ஒரு தகவல்

## கேள்வி கேட்க வேண்டிய முறை

முன்னொரு காலத்தில் முனிவர்கள் பலர் ஒன்றுகூடி ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டார்கள். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது பற்றி அவர்களுக்கிடையில் விவாதம் எழுந்தது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விளக்கம் கூறினார்கள். இருந்தாலும் அவர்களுக்குச் சரியான விளக்கம் கிடைக்கவில்லை. ஆதலால் அவர்கள் தங்கள் சந்தேகத்தை உத்தாலக மகரிஷியிடம் சென்று கேட்டனர்.

உத்தாலகரோ, "இதற்கு ஒரே ஒருவரால் தான் விளக்கம் கொடுக்க முடியும். அவர்தான் மகாராஜா அஸ்வபதி. மகாஞானி அவர். எனவே நாம் அனைவரும் அவரிடம் சென்று இதைப்பற்றிக் கேட்கலாம்," என்றார்.

அதன்படியே அனைவரும் அஸ்வபதி மகாராஜாவிடம் சென்றனர்.

அஸ்வபதி எல்லோரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவர்களுக்கு உயர்ந்த ஆசனங்கள் கொடுத்து விதி முறைப்படி வணங்கினார். பின் உணவுகள் பரிமாறி அவர்கள் அனைவரையும் சாப்பிடும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் ரிஷிகள் யாரும் சாப்பிடாமல் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

இதைக் கவனித்த அஸ்வபதி மன்னர் அவர்களை நோக்கி, "ஏன் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்? நான் கொடுத்த உணவு குற்றமுடையது என்று நினைக்கிறீர்களா? அப்படி எதுவும் இல்லை. என் ராஜ்ஜியத்தில் திருடர்கள் கிடையாது. குடிகாரர்கள் கிடையாது. ஆசாரமற்ற ஆண்கள் கிடையாது. ஆசாரமற்ற பெண்களும் கிடையாது!" என்றார்.

அதற்கு அந்த ரிஷிகள், "நாங்கள் இங்கே உணவு உட்கொள்ள வரவில்லை. ஜீவாத்மா – பரமாத்மா பற்றிய எங்களுடைய சந்தேகத்தை தீர்த்துக் கொள்வதற்காகவே உங்களிடம் வந்திருக்கிறோம்" என்று தெரிவித்தனர்.

உடனே அஸ்வபதி மகாராஜா, "இன்று உணவு அருந்துங்கள். நாளைக்கு அதைப்பற்றி யோசிக்கலாம்" என்று தெரிவித்தார். முனிவர்களும் அவரது கருத்தை ஏற்றுக் கொண்டு உணவு அருந்தினார்கள்.

அதன்பின் அவர்கள் தங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று தங்களுக்குள் உரையாட ஆரம்பித்தனர்.

அப்போது முனிவர்களில் ஒருவர், "அஸ்வபதி மன்னர் நாளைக்கு இதைப்பற்றி யோசிக்கலாம் என்று தான் கூறினாரே தவிர, பதில் சொல்கிறேன் என்று சொல்லவில்லையே!" என்றார்.

அவர் அவ்விதம் கூறியதும் 'மகாராஜா இப்படிச் சொன்னதற்கு காரணம் என்னவாக இருக்கும்?' என்று முனிவர்கள் யோசிக்க ஆரம்பித்தனர்.

அப்போது மகரிஷி உத்தாலகருக்குக் காரணம் புரிந்தது.

உடனே அவர் மற்ற முனிவர்களைப் பார்த்து, "நாம் எல்லோரும் ரிஷிகள். நன்கு விபரம் தெரிந்தவர்கள். அப்படியிருந்தும் ஒரு விடயத்தில் நாம் சரியாக நடந்து கொள்ளவில்லை" என்றார். "எந்த விடயத்தில் நாம் சரியாக நடந்து கொள்ளவில்லை!" என்று மற்ற முனிவர்கள் வினவினார்கள்.

உத்தாலகர் விளக்கம் கூறினார். நம்முடைய சந்தேகத்தை மன்னர் அஸ்வபதியிடம் கேட்க வேண்டிய முறையில் நாம் கேட்கவில்லை. நாம் உயர்ந்த ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டு அவரிடம் விளக்கம் கேட்டது சரியில்லை' என்றார் உத்தாலகர்.

அவர் கூறியதைக் கேட்ட பின்னர் தான் முனிவர்களுக்கு தாங்கள் செய்த தவறு புரிந்தது. மறுநாள் முனிவர்கள் அனைவரும் அஸ்வபதியிடம் சென்றார்கள். ஒரு சீடன் எப்படி குருவை நாடிப் போக வேண்டுமோ, அந்த முறையில் பணிவோடு, முறைப்படி அஸ்வபதியை வணங்கி தங்கள் சந்தேகத்தை கேட்டார்கள். அவரும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு சரியான விளக்கம் கொடுத்தார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால், எதையும் கேட்க வேண்டிய முறைப்படி கேட்க வேண்டும் என்பதுதான்!

ஒரு விடயத்தை எடுத்துச் சொல்பவர் உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டும். கேட்டுத் தெரிந்து கொள்பவர் தாழ்ந்த இடத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் கேட்பவர் அக்கறையாக கவனித்துப் புரிந்து கொள்ளும் பக்குவம் ஏற்படும் இது கௌரவப் பிரச்சினையல்ல.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## மாவட்ட மட்ட மூத்த பிரஜைகள், மாற்று வலுவுள்ளோர்

# சர்வதேச தின நிகழ்வும், கண்காட்சியும்

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் மூத்த பிரஜைகள் மாற்று வலுவுள்ளவர்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக மாவட்ட மட்ட நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

ஒக்டோபர் மாதம் 10,11 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்திலான மூத்த பிரஜைகள் மாற்று வலுவுள்ளோர் தின விழாவும் கண்காட்சியும் நடைபெறவுள்ளன. சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமூகம் சமூகத்தில் வைத்தே இவர்களுக்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்ற உணர்வை மேலோங்கச் செய்யும் விதத்தில் இந் நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக மட்டத்திலிருந்து தெரிவுகள் நடைபெற்று மாவட்ட மட்டத்தில் இறுதி நிலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதற்கான முன்னோடி நடவடிக்கைகளை சமூக சேவை உத்தியோகத்தர்களும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களும் (சமூக சேவை) முன்னெடுக்கவுள்ளனர்.

மூத்த பிரஜைகள் மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டு நிகழ்வுகள் கல்வித் திணைக்கள அனுசரணையுடன் விழிப்புணர்வு போட்டிகள், சமூக சேவையில் முத்திரை பதித்த மூத்த பிரஜைகள் கௌரவப்படுத்துதல் தொனிப் பொருளை வெளிப்படுத்த வல்ல கருத்தாழம் மிகுந்த கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

அனைத்திற்கும் மகுடம் வைத்த நிகழ்வாக திறமைகளையும் சாதனைகளையும் பிரதிபலிக்க கூடிய காட்சிப்படுத்தல்களுடன் கூடிய கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

முதியோர் சங்கங்கள், முதியோர் இல்லங்கள், வலுவிழந்தோர் சங்கங்கள் என்பன நிகழ்வுகளில் பங்கேற்கலாம். அத்தோடு ஆர்வலர்கள் அனைவரதும் காத்திரமான பங்களிப்புக்களையும், ஆலோசனைகளையும் சமூக சேவை உத்தியோகத்தர்களிடம் வழங்கலாம்.

அனைத்து சமூகவியல் வல்லுனர்களினதும் பங்களிப்பை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளதாக யாழ். மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட திட்ட இணைப்பாளர் த. கிருபாகரன் தெரிவித்துள்ளார். ஓ

# அகில இலங்கை இந்து மாமன்றம் இன்று 300 முதியோர்களை பொறுப்பேற்கிறது


(கொழும்பு)

வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ள வசதி குறைந்த 300 முதியோர்களை இன்று புதன் கிழமை அகில இலங்கை இந்து மாமன்றம் பொறுப்பேற்றுக் கொள்கிறது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அமைச்சின் செயலாளர் திருமதி வி. ஜெகராசசிங்கம் ஆகியோரிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று 300 முதியோர்கள் இந்து மாமன்றத்திடம் ஒப்படைக்கப்படுகிறார்கள்.

இவர்கள் அனைவரும் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ள அவர்களுக்கான இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்படவிருக்கிறார்கள்.

இந்து மாமன்றத்தின் சமூக நல குழுத் தலைவர் சின்னத்துரை தனபாலா தலைமையிலான பிரதிநிதிகள் இன்று வவுனியா நலன்புரி முகாமில் வைத்து முதியோர்களை பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள் என அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அறிவித்துள்ளார். ஓ



யாழ். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பிணி தாய்மாருக்கும் சிறுவர்களுக்கும் வழங்குவதற்காக பிளென்ரி பூட்ஸ் (Plenty Foods) தனியார் நிறுவன நிர்வாக முகாமையாளரும் பொது முகாமையாளருமான சமிகருண நாயக்க யாழ். அரசாங்க அதிபரிடம் பொருட்களை கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

02.09.2009
(ஆவணி 17, புதன்கிழமை)
திரயோதசி மாலை 6.32 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.39 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, நண்பர்கள் உதவி, நல்ல செய்தி, விருந்து பசாரம். |
| இடபம் | பயந்த சுபாவம், பிரயாணம், நல்ல முயற்சி, தனவிரயம். |
| மிதுனம் | அபகீர்த்தி, முயற்சி தாமதம், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| கடகம் | நண்பர்கள் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, வாக்கு மேன்மை, காரிய அனுகூலம். |
| சிங்கம் | சுபநிகழ்வு, பாராட்டு, முயற்சி கைகூடும், பிறர் உதவி. |
| கன்னி | உடல் நலக்குறைவு, உறவினர் மனஸ்தாபம், வேலைச்சுமை, அதிக பிரயாசை. |
| துலாம் | தொழில் சிந்தை, மனச்சஞ்சலம், பயணம், போசன சுகம். |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், அந்நியர் சந்திப்பு, உறவினர் வருகை. |
| தனுசு | தொழில் ஆர்வம், நண்பர்கள் மனஸ்தாபம், குடும்ப நன்மை, முயற்சி தாமதம். |
| மகரம் | பெரியோர் சந்திப்பு, தெய்வ சிந்தை, போசன நன்மை, புதிய முயற்சி. |
| கும்பம் | மனச்சஞ்சலம், காரிய அலைச்சல், திடீர் பயணம், தனவிரயம். |
| மீனம் | கலந்துரையாடல், காரிய அனுகூலம், தனவருவாய், இனசன வருகை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 |
| தக்காளி | 10 | 20 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 15 | 25 | 30 |
| வாழைக்காய் | 20 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40 |
| பெரிய வெங்காயம் | 40-80 | 80-90 | 60 |
| பாகற்காய் | 30 | 40 | 40 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 40 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 90 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 70 | 85 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25 |

## முன்பள்ளி மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள்ளி மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சரசாலை இராமாவில் பிள்ளையார் முன்றலில் சமாதான நீதிவான் க. சிவசங்கரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை மயூரி முன்பள்ளி போசகர் சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் சாள்ஸ், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே. சிவராஜலிங்கம், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கம், தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீஸன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் கிளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சாவகச்சேரி நவீன சந்தை மேல் மாடியில் தனது கிளையினை திறந்து வைக்கவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. அருட்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரபல வர்த்தகர் எம். மதீசன் (L.G.Abans) நிறுவனம் கலந்து கொண்டு கிளையினை திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு மாவட்ட விற்பனை முகாமையாளர் இ. ஆனோல்ட் மாவட்ட உதவி விற்பனை முகாமையாளர் க. செல்வராஜன் பொதுக் காப்புறுதி உதவி விற்பனை முகாமையாளர் ஆர். பாலரூபன் யாழ் கிளையின் உதவி முகாமையாளர் எஸ்.ஏ. நிரஞ்சன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதனை முன்னிட்டு இன்று மாலை 4 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 20-20 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஜனசக்தி காப்புறுதி அணியை எதிர்த்து சாவகச்சேரி விண்டோஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இதனை பிரபல தொழிலதிபர் இ. எஸ்.பி. நாகரத்தினம் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஓ)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட பாடசாலைகளிலிருந்து தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றும் மாணவர்களை அழைத்துச் செல்லவுள்ள பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் போக்குவரத்து விடயங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் பொறுப்பாசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## தரம் 6 க்கான கணித விஞ்ஞான ஒலிம்பியாட் மாகாணமட்ட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி தொடர் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களை தேசிய மட்டப் பரீட்சைக்குத் தெரிவு செய்வதற்கான மாகாண மட்டப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பயிற்சி நெறியில் கலந்து கொண்ட சகல மாணவ மாணவிகளும் இப் பரீட்சைக்குத் தவறாது தோற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். இப்பரீட்சை 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## மூலிகைகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆயுர்வேத திணைக்களமும் ஆயுர்வேத அமைச்சும் யாழ். கல்வி வலயத்துடன் இணைந்து யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தரம் 9 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மூலிகை பற்றிய விரிவுரை ஒன்றினை எதிர்வரும் 05 ஆம் திகதி சனிக்கிழமை 10 மணி தொடக்கம் 12 மணிவரை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இவ்விரிவுரையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி, ஊரெழு கணேசா, உரும்பிராய் சைவத்தமிழ், உரும்பிராய் சந்திரோதயா ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 9 உம் அதற்கு மேற்பட்ட மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் விற்பனை மேம்படுத்தல் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண நெல்லியடி கிளையினால் மக்களின் நன்மைகருதி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய உற்சவ காலத்தில் விற்பனை மேம்படுத்துதல் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி உற்சவ காலத்தில் இவ் காப்புறுதி திட்டத்தில் இணையும் அனைத்து மக்களுக்கும் பல்வேறு நன்மைகளுடன் கூடிய காப்புறுதிகளும் காப்புறுதி செய்து கொள்பவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.




எனவே இவ் உற்சவ காலத்தில் காப்புறுதி திட்டத்தில் இணைந்து தமது சேவைக்கு பூரண ஆதரவு வழங்குவதோ இக் காலப் பகுதியில் இணைத்து கொள்வதன் மூலம் பல்வேறு சலுகைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன யாழ். கிளை சந்தைப்படுத்தல் முகாமையாளர் பி. சத்தியன் கேட்டுள்ளார். (ஓ-27)

## உதவிப் பிரதேச செயலர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி. அ. காந்தசீலன் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு மாகாண விவசாய அமைச்சில் கடமையாற்றிய செல்வி. ர. நவரத்தினம் நியமிக்கப்பட்டு பிரதேச செயலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (ஓ)

## வழிகாட்டல் கருத்தரங்கு

திறந்த பல்கலைக்கழகம் மற்றும் சட்டக் கல்லூரிகளில் கற்கை நெறியினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு தோற்றவுள்ளோர் உரிய நேரத்திற்கு வருகைதந்து கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஓ-30)

## யாழ். செய்திகள்

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித்தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் "பன்னிரு திருமுறைப் பாராயணம்" நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் யாழ்ப்பாணம் சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் காலைப்பூசையைத் தொடர்ந்து மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது. சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## கைத்தொழில் வர்த்தக சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

சீனாவில் பாரியளவிலான வர்த்தக, கைத்தொழில் கண்காட்சி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் வாரத்தில் நடைபெறவுள்ளது. பல்வேறு வகையிலான உற்பத்தியாளர்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றவுள்ள மேற்படி கண்காட்சி தொடர்ச்சியாக 03 வாரங்களுக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி கண்காட்சியின் மூலம் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைசார் தொடர்புகளை பெறுவதற்கு Industrial Services Bureau என்னும் நிறுவனத்தினூடாக யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

கண்காட்சியினை பார்வையிட ஆர்வமுள்ளோர் இம்மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் இல. 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள "யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ)



புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட டாக்டர் தி. ஞானசேகரன் ஐயா அடிக்கல்லை நாட்டி வைப்பதற்காக வழிபாட்டில் ஈடுபடுவதையும், அருகில் ஆலய பூசகர், ஏனைய விருந்தினர்கள், கணேச சனசமூக நிலைய நிர்வாக குழு உறுப்பினர்கள் முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோரை படத்தில் காணலாம்.

## பேரூந்து சேவையை விஸ்தரிக்குமாறு நலன்புரி நிலைய மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் குடும்பங்கள் தங்கள் பகுதிக்கு பேரூந்து சேவையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

J/134 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் நவாலி வடக்கு மானிப்பாய் பிரிவிலுள்ள இம்மக்கள் பேரூந்து சேவையை பெறுவதற்கு மூன்று கிலோமீற்றர் தூரம் வரை செல்ல வேண்டியுள்ளதாகவும் தங்கள் பகுதியான நவாலி வடக்கு, புலவர் வீதியினூடாக பேரூந்து சேவையை விஸ்தரிப்பார்களாயின் அட்டகிரி 1, 2 மற்றும் புலவர் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் 144 குடும்பங்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என தெரிவித்துள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து ஆனைக்கோட்டை வீதி வழியாக 782, 786 ஆகிய பேரூந்துகள் செல்வதாகவும் இப்பாதையினூடாக செல்லும் பேரூந்துகள் அருகிலுள்ள புலவர் வீதியில் தரித்து விட்டு புறப்படலாம் எனவும் மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

பேரூந்து சேவை இல்லாது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கும் படியும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-30)

# போல் ஜோர்ஜ் கொலை வழக்கில் நடிகை பாவனாவுக்கு தொடர்பில்லை



## பாவனாவின் முகாமையாளர் மறுப்பு

முத்தூட் நிறுவன தலைவரின் மகன் போல் ஜோர்ஜ் கொலை வழக்கில் நடிகை பாவனாவுக்கு எந்தத் தொடர்புமில்லை எனவும் இது தொடர்பாக வெளியாகும் செய்திகள் தவறானவை என்றும் பாவனாவின் முகாமையாளர் மறுத்துள்ளார். கேரளாவில் மிகவும் பிரபலமான முத்தூட் நிறுவ்னங்களின் தலைவரின் மகன் போல் ஜோர்ஜ் அண்மையில் படுகொலை செய்யப் பட்டார்.

இச்சம்பவத்துடன் நடிகை பாவனாவுக்கு தொடர்பிருப்பதாக கேரளாவில் பரபரப்பு எழுந்துள்ளது. ஆனால் இதை பாவனாவின் முகாமையாளர் மறுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

பாவனாவுக்கும், சம்பந்தப்பட்ட கொலைக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. கொலை நடந்த் சமயத்தில் பாவனா, நடிகர் பிருத்விராஜுடன் ஜோஷி இயக்கத்தில் உருவாகும் மலையாளப் படத்தின் படப்பிடிப்பில் இருந்தார் எனத் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# இந்தியாவின் அணு ஆயுத வசதிகளை தாக்க தயாராகுமாறு பெனசிர் பணித்ததாக தகவல்

(இஸ்லாமாபாத்)

கடந்த 1990 ஆம் ஆண்டு, பாகிஸ்தானின் அணு ஆயுத கூடங்கள் தாக்கப்பட்டால் இந்தியாவின் அணு ஆயுத வசதிகளை தாக்க தயாராக இருக்குமாறு பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் பெனசிர் பூட்டோ விமானப் படைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இத்தகவலை அந்நாட்டு இராணுவ முன்னாள் தலைமை ஜெனரல் மிர்ஷா அஸ்லம் பெக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு அஸ்லம் பெக் அளித்த பேட்டி கடந்த 1990 ஆம் ஆண்டு அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் இந்தியா ஆகியவை பாகிஸ்தானின் அணு ஆயுத கூட வசதிகளை தாக்க திட்டமிட்டுள்ளதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது.

எனவே பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் பெனசிர் பூட்டோ விமானப் படையை தயாராக இருக்குமாறு உத்தரவிட்டார்.

பூட்டோ மீண்டும் பதவிக்கு வருவதை தடுப்பதற்காக 1988 ஆம் ஆண்டு இஸ்லாமிஜம் கூரி இட்டிகாத் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பை வளர்க்க சவூதியிலிருந்து மறைந்த அரசியல் வாதியான மகமூத் ஹரூனுக்கு அதிகளவில் பணம் கொடுத் தனர்.

தேர்தல் பிரசாரத்திற்கும் பண உதவி செய்யப்பட்டது. 1990 இல் பாகிஸ்தானுக்கு எதிரான சதித் திட்டம் குறித்து பல தகவல்கள் வந்த போதும் பெனசிர் அஞ்சாமல் தைரியமாக இருந்தார். இவ்வாறு அஸ்லம் பெக் கூறினார். (ஓ-4)




# இலங்கையில் சீன துறைமுகம் இந்தியாவுக்கு பேராபத்து

## நெடுமாறன் தெரிவிப்பு

(பரமக்குடி)



இலங்கையில் சர்வதேச துறைமுகத்தை நிறுவி வருகிறது சீனா. இதனால் இந்தியாவுக்கு பேராபத்து ஏற்படும் அபாயம் உள்ளது என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் எச்சரித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்சார்பில் பரமக்குடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் நெடுமாறன் பேசியதாவது,

மன்னார் வளைகுடா படுக்கையில் பெற்ரோல் எடுக்கும் உரிமையை சீனாவிடம் கொடுத்துவிட்டது இலங்கை. இந்திய தென் பகுதியில் பாதுகாப்பு கேடயமாக இருந்த இலங்கை இப்போது சீனாவும் எல்லா இராணுவத் தொழிற்சாலைக்கும் அனுமதி அளித்துவிட்டது. இது இந்தியாவுக்கு பேராபத்து என்று தெரிவித்தார். (ஓ-4)

# தமிழக முகாம்களில்— உறவினரைப் பார்க்கச் செல்வோரும் அகதிகளாகப் பதிவு நாடு திரும்புவதில் சிக்கல்

(மண்டபம்)

தமிழக முகாம்களில் வாழும் உறவினர்களைப் பார்வையிடுவதற்காக மூன்று மாத கால விசாவில் வருகை தரும் இலங்கைத் தமிழர்களையும் அகதிகளாகப் பதிவு செய்வதனால் அவர்கள் தாயகம் திரும்ப முற்படும் போது புதிய சிக்கலை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் தமிழக முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளைப் பார்வையிடுவதற்கு அவர்களின் உறவினர்கள் மூன்று மாதகால விசாவில் வருவது அதிகரித்துள்ளது.

இந்நிலையில் அவ்வாறு வருவோர் முகாமிலேயே தங்குவதால் அவர்களையும் அகதிகளாக மண்டபம் தனித்துணை ஆட்சியர் அலுவலக அதிகாரிகள் பதிவு செய்கின்றனர். அவர்களுக்கும் அகதிப் பதிவெண், தனி வீடு, குடும்ப அட்டை, மற்றும் அடையாள அட்டை வழங்கப்படுகின்றன.

இவர்கள் விசா காலம் முடியும் முன்பே இலங்கை செல்ல விரும்பினால் முகாம் பொலிஸார், கியூ பிரிவு பொலிஸார், தனித்துணை ஆட்சியர் சென்னை அகதிகள் மறுவாழ்வுத் துறை அதிகாரி ஆகியோரின் சான்றிதழ்கள் பெறவேண்டும். இந்தச் சான்றிதழ்களைப் பெற குறைந்தது ஒரு மாதம் தேவைப்படும்.

இதனால் அவர்கள் முறையான அனுமதியின்றி படகில் இலங்கைக்குச் செல்வது அதிகரித்துள்ளது. எனவே விசாவில் வருபவர்களின் கடவுச் சீட்டு விபரங்களைத் தனியாகப் பதிவு செய்தால் இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என அகதிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில் அகதிகளைப் பார்க்கவரும்உறவினர்கள் முகாமில் 10 நாட்கள் வரை தங்கலாம். அதற்கும் மேல் தங்குபவர்களை அகதிகளா கப் பதிவு செய்ய வேண்டியிருக்கிறதுஎன்றனர். (ஓ-4)

# வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் சேமித்து வைத்துள்ள கறுப்பு பணத்தை இந்தியாவுக்குக் கொண்டுவர முயற்சி

(புதுடில்லி)

ஆகஸ்ட் 31 சுவிஸ்சர்லாந்து வங்கிகளில் போடப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை இந்தியாவுக்கு கொண்டு வருவதுதொடர்பாக சுவிஸ்சர்லாந்துடன் இந்தியா பேச்சு நடத்தவுள்ளது. இருநாடுகளிடையிலான பேச்சு வார்த்தை இந்த ஆண்டு டிசம்பரில் நடைபெறும் எனத் தெரிகிறது.

அமெரிக்கா விடுத்த கோரிக்கையின் படி அந்நாட்டைச் சேர்ந்தவர்களின் பட்டியலைத் தர சுவிஸ்சர்லாந்து முன் வந்துள்ளது. இந்நிலையில் இந்தியாவைச் சேர்ந்த அரசியல் வாதிகள் ,ஆயுததாரர்கள் ஆகியோர் சுவிஸ்சர்லாந்து வங்கிகளில் பதுக்கி வைத்துள்ள பணத்தைக் கொண்டுவர மத்திய அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

இதனிடையே கறுப்புப்பணத்தைத் தேடி சுவிஸ்சர்லாந்திற்கு வரவேண்டாம் என கடந்த வாரம் அந்நாட்டு வங்கிகள் தெரிவித்துள்ளன.

இத்தகைய சூழலில் இந்திய நிதித்துறை அதிகாரிகள் இதுதொடர்பாக முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையை தொடங்கவுள்ளனர்.

பொருளாதார மேம்பாட்டுக்கு கூட்டாக செயல்படுவதற்காக சுவிஸ்சர்லாந்துடன் போடப்பட்ட இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு முறை ஒப்பந்த அடிப்படையில் கறுப்புப் பணத் தைக் கொண்டு வருவது தொடர்பாக பேச்சு நடத்தப்படும் என்று அதிகாரிக்ள் தெரிவித் தனர்.

இந்த ஒப்பந்த அடிப்படையில் சுவிஸ்சர்லாந்து அரசு தகவல்களை அழிக்கும் பட்சத்தில் ,அதில் தனி நபர்களும் இந்திய சட்ட விதிகளை மீறி பணத்தைப் பதுக்கியிருப்பது தெரியவந்தால் அவர்கள் மீது வழக்குத் தொடரவும் முடிபு செய்துள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.

சுவிஸ்சர்லாந்து வங்கியிடமிருந்து தகவல்களைப் பெறுவது அத்தனை எளிதான விஷயமல்ல. இந்த விஷயத்தில் மத்திய அரசு உரிய அணுகுமுறையை கடைப்பிடித்து செயல்படுத்துவதன் மூலமே இதைப் பெற முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுவிஸ்சர்லாந்து அரசு இதுபோன்ற ஒப்பந்தத்தை 90 நாடுகளுடன் செய்து கொண்டுள்ள சமீபத்தில் அமெரிக்காவும் இந்த் ஒப்பந்த விதிகளின் படி தான் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்கள் பதுக்கி வைத்திருந்த விபரத்தைக் கேட்டுப்பெற்றது.

புணேயைச் சேர்ந்த குதிரைப்பந்தய உரிமையாளர் ஹசன் அலி என்பவர் பல்லாயிரக்கணக்கான கோடிகளை சுவிஸில் வங்கியில் பதுக்கியுள்ளதாகவும் இதன் மூலம் பல கோடி வரி ஏய்ப்பு செய்துள்ளதாகவும் புகார் எழுந்துள்ளது.

வெளிநாடுகளில் இந்தியர்கள் போட்டு வைத்துள்ள கறுப்புப்பணத்தை அந்தந்த நாடுகளின் ஒத்துழைப்போடு இந்தியாவுக்கு கொண்டுவர முடியும் என்றும் நிதித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஓ-4)

# இலங்கைக்கு இந்தியக் கிரிக்கெட் குழு தடை விதிக்கக் கோரி மனு தாக்கல்

(மதுரை)

இலங்கைக்கு இந்திய கிரிக்கெட் குழு செல்லத்தடை விதிக்கக் கோரி வழக்கறிஞர் ஜோயல்பவுல் அந்தோணி உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மனு தாக்கல் செய்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இந்திய கிரிக்கெட் அணியின் முத்தரப்பு போட்டிகள் செப். 8 முதல் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு சர்வதேச மனித உரிமை அமைப்புகளை வடபகுதியில் அனுமதிக்கவில்லை. சர்வதேச சட்டங்களை மதிப்பதும் இல்லை. தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் வெடி பொருள்களை இலங்கை பயன்படுத்தி வருகிறது.

கடந்த 60 ஆண்டுகளில் 12 இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தற்போதும் இலட்சக் கணக்கானோர் திறந்த வெளி சிறையில் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியை இலங்கைக்கு அனுப்பினால் சர்வதேச சமூகம் இந்தியாவை மதிக்காது.

எனவே இந்திய கிரிக்கெட் அணி இலங்கைக்குச் செல்லத் தடைவிதிக்க வேண்டும் என மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு தாக்குதலுக்கான வக்காலத்தில் 512 வழக்கறிஞர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன் மீது நேற்று விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# பிளாஸ்ரிக் வீதிக்கு மத்திய அரசு அங்கீகாரம்

(திருப்பரங்குன்றம்)

மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி வேதியியல் பேராசிரியர் வாசுதேவன் கண்டு பிடித்த பிளாஸ்ரிக் வீதிக்கு மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மறுபயன்பாட்டிற்குப் பயன்படாத பொலித்தின் கவர்கள், பிஸ்கட், சொக்லேட் கவர்கள், தெர்மாகோல் போன்றவற்றை மீண்டும் பயன்படுத்தவும் பூமி வெப்பமடைவதைத் தடுக்கவும் இப்பேராசிரியர் வாசுதேவன் ஆராய்ச்சி மேற்கொண்டார்.

அதன் விளைவாக கழிவுகளை எரிக்காமல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்களுடன் கலந்து பிளாஸ்ரிக் கோட்டிங் கொடுத்து அவற்றுடன் தார் சேர்த்து பிளாஸ்ரிக் வீதி அமைத்தார்.

இதனை தற்போது மத்திய கிராம வளர்ச்சி அமைச்சகத்தின் தேசிய கிராமப்புற வீதிகள் வளர்ச்சி நிறுவனம் அங்கீகரித்து கிராமப்புறங்களில் பிளாஸ்ரிக் தார் வீதிகள் அமைக்க ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து பேராசிரியர் தெரிவிக்கையில் இவை சாதாரண தார் வீதியை விட ஐந்தாண்டுகள் கூடுதல் பலன் தரும். மழைநீர் ஊடுருவி வீதிகள் பழுதடைவதில்லை. பராமரிப்பு செலவுகள் கிடையாது. இதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு பல கோடி ரூபாய் மிச்சமாகும் எனத் தெரிவித்துள்ளார். (ஓ-4)


# இராமர் கோவில் வளாகத்தில் 40 இரகசிய கமராக்கள்

அயோத்தியில் இராமர் கோவில் வளாகத்தில் 40 இடங்களில் பொருத்தப் பட்டுள்ள இரகசிய கமராக்கள் கடந்த சனிக்கிழமை முதல் செயற்பட ஆரம்பித்துள்ளன. பிரச்சினைக்குரிய பாபர் மசூதி இருந்த இடம் உட்பட 71.3 ஏக்கர் பகுதி இராமர் கோவில் கட்டுவதற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் தற்போது அங்கு சிறிய அளவிலான இராமர் கோவில் இருப்பதால் இந்த வளாகத்தில் இரகசிய கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன.

மேலும் கோவில் வளாகப் பகுதியை சுற்றி ஒரு அடி உயரத்துக்கு சீமெந்து சுவர் எழுப்பப்பட்டு அதன் மீது இரும்பு வேலி யும் அமைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-4)

# யாழ்ப்பாணத்தில் அடுத்தடுத்து இடம்பெற்ற அசாதாரண நிகழ்வுகளும் பலாபலன்களும்



### இயற்கை

முதலில் இயற்கை என்பது என்ன என்பதை அறியவேண்டும்.சுருங்கச் சொல்வதென்றால் இயற்கை என்பது இறைவனின் ஆணை என்றுதான் செப்பவேண்டும். அண்ட சராசரமெங்கும் இறைவனின் ஆணைப்படி தான் எல்லாச்செயல்களும் நிகழ்கின்றன.

இறைவனின் ஆணை என்றால் கடவுளின் கட்டளை என்று பொருள்படும். கடவுளின் கட்டளைப்படி அனைத்தும் செயற்பட்டே ஆக வேண்டும்.

உதாரணமாக ஒத்த பரிமாண அமைப்புக்களைக் கொண்ட ஒரு சற்சதுரமான மேசையின் புவியீர்ப்பு மையம் அந்த மேசையின் நான்கு கால்களை இணைக்கும் சதுரத்தின் நடுவில் தான் இருக்கும். அம் மேசைக்கு மேல் ஒத்த தன்மையாக எவ்வளவு பாரங்கள் ஏற்றப்பட்டாலும் புவியீர்ப்பு மையம் இருந்த இடத்தில் தான் இருக்கும்.

ஒரு மயிரளவும் அசையாது. ஆனால் பாரங்கள் மிகக் கூடி விட்டால் அது முறியும். இது ஒரு செயல் இச்செயல் சரிவர செயற்படுகின்றதா என இறைவன் வந்து பார்த்துக் கொண்டிருப்பதில்லை. ஆரம்பத்தில் அவன் இட்ட ஆணைப்படி நடக்கின்றது.

சற்று வித்தியாசமான ஓர் உதாரணத்தை எடுங்கள் ஒரு பளபளப்பான 30 பாகை சாய்வான ஒரு சாய்தளத்தில் அந்த மேசையை வைத்தாலும் அம் மேசையின் புவியீர்ப்பு மையம் அதன் கால்களை இணைக்கும் நான்கு கோடுகளுக்குள் தான் விழும். அதனால் மேசை சமனிலை மாறாது இருக்கும்.

ஆனால் பதிந்துள்ள மேசைப்பக்கத்தில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு அப்பக்கத்திற்கான பாரங்களைக்கூட்டினால் புவியீர்ப்பு மையம் சரிந்திருக்கும் பக்கத்திலுள்ள இரு கால்களை இணைக்கும் கோட்டை கொஞ்சம் கொஞ்சமாக அண்மிக்கும் . கடவுளை கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டாலும் அது நடந்து கொண்டு தான் இருக்கும். அப்படிக் கெஞ்சிக் கொண்டு மேலும் புத்தகங்களை அடுக்கினால் அம் மேசையின் புவியீர்ப்பு மையம் அக் கோட்டிற்கு வெளியே செல்லும். உடனே மேசை கவிழ்ந்து விடும், அல்லது வழுக்கிக் கொண்டு கீழே செல்லும். இது அந்த மேசைக் கால்கள் அத்தளத்தில் ஏற்படுத்தும் உராய்வு எதிர்ப்பை அடிப்படையாக கொண்டது.

இந்நிகழ்ச்சியில் இறைவன் வந்து பார்த்துக் கொண்டு நின்று இப்போது புவியீர்ப்பு மையம் கால்களுக்கு வெளியே போய் விட்டது. எனவே மேசையே கவிழ்ந்து விழு என்று சொல்வதில்லை அன்று அவன் இட்ட ஆணைப் படிதான் எல்லாம் நடக்கும்.

எனவே தான் யாழ்ப்பாணாத்துச் சித்தர் எனப் பெயர் பெற்ற கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் எப்பவோ முடிந்த விஷயம் , பொல்லாப்பும் ஒன்றும் இல்லை என்று சதா சொல்லுவார் அவரை வணங்கும் வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டது. அவரை கண்ணாரக்கண்டு களிப்படைந்தேன் இவ்வாறு இறைவனின் ஆணைப்படி நடப்பதை சாதாரண அல்லது வழமையான செயல்கள் எனப்படும் ஆனால் இறைவனை [illegible] வணங்கி அவரின் அருளைப்பெற்றவர்களுக்கு தேவையைப் [illegible] அவர்களிற்கு உதவுவார். இவைகள் சா[illegible]ரண நிகழ்வுகள் அல்லது திருவிளையாடல்கள் எனப்படும். இவைகளுக்கு காரணம் ஒரு பொருளில் இறைவன் ஏற்படுத்தும் சக்தி தான்.

### பொருள்

பல அணுக்களால் ஆக்கப்பட்டதுதான் அணு மூலக்கூறுகள். பற்பல இலத்திரனியங்களாலும் புரோத்திரன்களாலும் ஆக்கப்பட்டது. எல்லாப் பெருள்களும் இந்த இலத்திரன்களாலும் புரோத்திரன்களாலும் தான் ஆக்கப்பட்டன. அதாவது பொன்னை ஆக்கும் இலத்திரன்களும் புரோத்திரன்களும் தான் மரக்குற்றியிலும் உள்ளன.

ஆனால் அவைகளின் எண்ணிக்கைகளும் அமைப்புகளும் வேறுபட்டவை. உரிய சக்தியினால் இந்த எண்ணிக்கைகளையும் அமைப்புகளையும் இறைவனால் மாற்றி அமைக்க முடியும். எனவே தான் சுந்தரமூர்த்தி நாயனாரை எதிரிகள் கற்தூணில் கட்டி கடலில் போட்டதும் அவர் சிவபெருமானை நினைத்து *கற்றூணைப் பூட்டியோன் கடலில் பாய்ச்சினும். நற்றுணை யாவது நமச்சிவாயவே* என பாடி உதவிக்கு இறைஞ்சினார். சிவபெருமான் கற்றூணில் இருந்த இலத்திரன்களினதும் புரோத்திரன்களினதும் எண்ணிக்கைகளையும் அமைப்பையும் மரக்குற்றியினுடையது போன்று ஆக்கினார். மரக்குற்றி கடலில் மிதக்கும் தானே? எனவே கற்றூண் மரக்குற்றியாக கடலில் மிதந்து அவரை கரையில் சேர்த்தது.

### சிவசக்தி

மின்சார நேர் ஏற்றமுள்ள புரோத்திரன் தான் சிவன். எதிர் மறை ஏற்றமுள்ள இலத்திரன் தான் சக்தி .ஒரு பொருளைப் பிரித்து பிரித்துக்கொண்டே இருந்தால் ஈற்றில் அணுதான் மிச்சம். அதற்குத்தான் கடைசி உருவம் உண்டு. ஆனால் அதைப்பிரித்து வருவது பொருள் அன்று . ஆனால் அவைகள் மேற்குறிப்பிட்ட ஏற்றங்கள் தான். எனவே உருவமாக இருக்கக்கூடிய மிகச் சிறியது அணு தான். இந்த அணு தான் சிவ சக்தி. அது இரு சக்திகளைக் கொண்டது. அர்த்தநாரீஸ்வரர் அரைப்பங்கு ஆணும் அரைப்பங்கு பெண்ணும் உள்ள உருவம். இலத்திரன் சதா அசைந்து கொண்டிருக்கிறது. எனவே தான் சிவன் தான் சதா அசைந்து கொண்டு தூணிலும் துரும்பிலும் இருப்பவன் என்று ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் உபதேசித்தார்.

### சக்தி அலைகள்

அண்ட சராசரம் எங்கும் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் சக்தி அலைகளினால் தான் செயற்படுகின்றன. சூரியன் தமது பூமியில் இருந்து 150 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. சூரிய ஒளி ஒரு செக்கனுக்கு 300 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கு அலை அலையாகச் சென்று பல்வேறு சக்திகளை அளிக்கின்றது.

சூரிய அலைகள் படாத பொருட்கள் செயலற்றுக்கிடக்கின்றது .அதனால் தான் வட துருவத்திலும் தென் துருவத்திலும் பனிப்பாறைகள் அசைவற்றுக்கிடக்கின்றன. மின் சார அலைகள் வானில் அலை அலையாக வருவதினால் தான் வானொலி, தொலைக் காட்சி, கையடக்கத்தொலைபேசிகள் முதலியன செயற்படுகின்றன.

காற்று சூறாவளியாகி அலையலையாக மக்களையும் மரங்களையும் அழிக்கின்றது. 26.12.2004 இல் இந்துமாசமூத்திரத்தில் யாவா தீவுக்கரையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் சராசரி 30 அடி உயரத்திற்கு உயர்ந்த சமுத்திர அலைகள் பல நாடுகளின் கரைகளைத்தாக்கி இரண்டு இலட்சம் மக்களைக் காவு கொண்டது. உஸ்னஅலைகளும் மக்களைக் கொல்கின்றன. பூமிக்குள் சூழலும் கொதிக்கும் பாறை அலைகள் மேல் நிலங்களை அதிரவைத்து மக்களைக் கொல்கின்றது. ஆகயத்தில் தோன்றும் மின்னல் அலைகளும் மக்களைக்கொல்கின்றன. எனவே இறைவனினால் தோற்றுவிக்கப்பட்ட ஆகயம் ,நிலம் ,நீர் , நெருப்பு ,காற்று ஆகிய ஐம்பூதங்களும் அவைகளாக்கப்படுகின்றன.

### எண்ண அலைகள்

மக்களின் பிரார்த்தனைகளும் எண்ணங்களும் அலைஅலையாகச் செல்கின்றன. இதனால் தான் ஒருவரின் எண்ணங்கள் மற்றொருவருக்கு பேச்சு, சமிக்ஞை இன்றி இரண்டாம் நபரின் மனதில், எண்ணங்களாக , கருத்துக்களாக உதயமாகின்றன. ஒருவன் தன் எதிரி கெட வேண்டும் என்று எண்ணி அவனைத் திட்டினால் நாவூறு ஏற்படுகின்றது. எதிரி கெட வேண்டும் என்று எண்ணி கண்களால் பார்த்தால் கண்ணூறு தாக்குகின்றது.

உதாரணமாக ஜேர்மனி நாட்டில் இருந்து ஓர் இளைஞன் அலுமினியப்பாத்திரங்கள் விற்கும் கடைக்குச் சென்று அடுக்கு அடுக்காக இருந்த பாத்திரங்கள் விழ வேண்டும் என்று எண்ணிப் பார்த்த பொழுது அவை பொலவென விழுந்தன.

### திருவருள் அலைகள்

மக்களின் பிரார்த்தனைகள் அலைகளாக இறைவனை அடைகின்றன. நியாயமான பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பொருட்டு இறைவன் தன் திருவருள் அலைகளை அவர்களுக்கு அனுப்புகிறார் . அவை கனவாகவும் திடீர் எண்ணங்களாகவும் நோய்கள் தீர்க்கும் கதிர்களாகவும் அடியார்களை அடைந்து செயற்படுகின்றன.

நாட்டுக்கு , பொதுமக்களுக்கு ஏற்படப் போகும் நன்மை தீமைகளை இறைவன் தன் அடியார்கள் மூலம் மக்களுக்கு அறிவிக்கின்றனர்.

### இசைகள் எழுப்பும் இனிய அலைகள்

உயிர் வாழ்வன ஓசை அலைகளை வெளிப்படுத்துகின்றன. சில ஓசைகள் காதுகளுக்கு இனியவையாகவும் சில காதுகளுக்குள் நாராசம் காய்ச்சி ஊற்றுவது போலவும் உணரப்படுகின்றன.

இன்னிசையை இறைவன் விரும்புகின்றான். அதனால் தான் சிவன் கையில் உடுக்கையும் கலைவாணி கைகளில் வீணையும் வைத்திருக்கின்றனர். இராவனின் இசையில் சிவன் நாட்டம் கொண்டார். தேவாரம் பாடும் இசையினால் பூட்டிய கோயிற் கதவு திறக்கப் பட்டது.

*பாடுவோர் பாடினால் ஆடாதோர் உளரோ*

என்ற சினிமாப்பாடலும் பாடி மக்களை ஆட வைத்தனர்.

### பிறப்பும் இறப்பும்

அண்ட சராசரங்களில் பூமியில் தான் மனிதன் வாழ்கிறான் என்பதை விஞ்ஞானிகளும் ஒத்துக்கொள்கின்றனர். ஆதலால் மனிதப் பிறவி கிடைத்தது பெரும் பாக்கியமாகும். இறைவனின் செயல்களினால் தான் பெண்களுக்கு கர்ப்பம் உண்டாகின்றது. கர்ப்பம் ஆத்மாவுடன் இணைந்து உடலாக உருவம் எடுக்கின்றது. நாடித்துடிப்பும் ஏற்படுகின்றது. தற்போது கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் பரிசோதனைக்கருவிகள் 20 நாட்கள் சென்ற கர்ப்பத்தில் உள்ள குழந்தையின் நாடித்துடிப்புகளை தான் அறிய வல்லவையாகவுள்ளன.

10 மாதங்களுக்குப் பின் பூமியில் பிறந்து வளரும் சில குழந்தைகள் கெட்டித்தங்கம் வெட்டி எடுத்து தக தகவென மின்னும் குழந்தைகளாக வளர்கின்றன. சில் இரும்பால் ஆக்கிய உருவங்கள் போன்று தெரிகின்றன. இவைகளுக்கு தாய் தந்தையரின் மரபுப்பண்புகள் தொடர்வதற்குக் காரணமாக ஜீன் குணங்கள் அடிப்படையாகவுள்ளன.

இப்படிப்பிறந்த குழந்தைகளின் வாழ்வு அக் குழந்தைக்குள் இருக்கும் ஆன்மா முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களைக் கொண்டு இறைவனின் ஆணைப்படி அமைகின்றது. ஆதலால் தான் சிலர் 8 வயதிலும் சிலர் 80 வயதிலும் இறைவனின் ஆணைப் படி இறக்கின்றனர். இது இயற்கையான இறப்பு.

ஒரு மனிதன் இயற்கையாக இறக்காது கொலை செய்யப்பட்டால் அது இறைவனின் ஆணைக்கு நேர் எதிரானது. இறைவன் கொலை காரனிடம் கோபப்படுவதால் பிரமகத்தி தோசம் அவனைப்பிடித்துக்கொள்ளும். அவ்வாறான்வரின் உடலில் மாற்றங்கள் ஏற்படும் மக்கள் இதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இராமரின் மனைவியாகிய சீதையை இராவணன் களவாகவும் நயவஞ்சமாகவும் பறக்கும் தேரில்- அதாவது உலங்கு வானூர்தி போன்ற ஒன்றில் ஏற்றி இலங்கைக்கு கொண்டு வந்து அசோக வனத்தில் சிறை வைத்தான். அதை அறிந்த இராமர் வானரப் படையோடு இலங்கை வந்து இராவணனையும் பல்லாயிரக்கணக்கான சேனைகளையும் போரில் அழித்தான்.

ஆனால் பல காலம் வாழ இருந்த இராவணனையும் சேனைகளையும் நடு வயதில் கொன்றதால் இயற்கையின் ஆணை மீறப் பட்டு பிரமகத்தி தோசம் ஏற்பட்டது.அதை நீக்குவதற்காக இராமர் கடலைக் கடந்தும் இந்தியாவின் தென்கை லையில் உள்ள ஊரில் இறைவனின் சிலையை வைத்து கோயில் கட்டி வேள்விகள் , சாந்திகள் முதலியவற்றைச் செய்து பிரமகத்தி தோஷத்தை நீக்கினார். இந்த இடம் தான் இராமேஸ்வரம். இறைவனான இராமரே இப்படி செய்தார் என்றார் கொலைகாரரை அத்தோஷம் சும்மா விடுமா? இல்லை ! விடவே விடாது கொலை காராரையும் அவர்கள் வாழும் இடங்களையும் அழிக்கவே அலை அலையாக அலையும்.

மக்களை ஆயிரக்கணக்கில் அவ்வப் போது கொன்ற தோஷங்கள் தான் தளபதிகளான முஷோலினியையும் கிட்லரையும் தற்கொலை செய்ய தூண்டியது. ஈராக் நாட்டின் ஜனாதிபதி தூக்கிலிடப்பட்டான். மக்களைக் கொல்லக்காரணமாக இருப்பவர்களுக்கும் இறைவன் இதையே செய்வார். இது இயற்கையின் ஆணை.

### அசாதாரண நிகழ்ச்சிகளினால் நிகழ்ந்த நிகழும் நிகழப்போகும் சம்பவங்கள்.

### வாளேந்திப் போரிட்ட பெண்கள்

பல நூற்றாண்டுகளுக்கு முன் பிரான்ஸ் நாட்டை வேறு ஒரு நாட்டரசன் பிடிக்கப் போரிட்டான். அப்போது இளம் பெண்ணாக இருந்த ஜோன் ஒவ் ஆர்க் கின் மனத்தில் இறைவன் தோன்றி அவளின் நாட்டைக் காப்பாற்ற வாழ் ஏந்திப் போராடும் படி ஆணையிட்டார். அவ்வாறு இறைவனின் திருவருளைப்பெற்ற ஜோன் ஒவ் ஆர்க் வாழ் எடுத்து குதிரையில் ஏறிப் போரிட்டு எதிரியை வென்று அவளின் நாட்டை காப்பாற்றினார்.

மதுரை மீனாட்சி அம்மன் வாளேந்திப் போரிட்டு மதுரை மாநகரை காப்பாற்றினார். அல்லி ராணியும் போரிட்டு நாட்டை காப்பாற்றினாள். எனவே தாய் நாட்டுக்காக போரிடுவது நியாயமானது என்பது உள்ளங் கை நெல்லிக் கனி போன்றது எனத் தெரிகின்றது. ஆனால் இந்திரா காந்தி தன் மக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இராணுவத்தினரை 1971ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானுக்கு அனுப்பி அந்நாட்டு மக்களையும் கொன்று தன் நாட்டு மக்களையும் கொன்றதால் ஏற்பட்ட தோஷம் காரணமாக இந்தியப் பிரதமராக இருந்த அவர் தன் நாட்டு வீரன் ஒருவனால் சுட்டுக்கொலை செய்யப்பட்டாள். இதுதன் நாட்டு மக்களை கொல்லக்கூடாது என்பதை உணர்த்துகிறது.

ஏந்திரி க.யோகராசா

### மாதாவின் சிலையில் இரத்தம் போன்ற துளிகள் காணப்பட்டன

யாழ்ப்பாணத்தில் 2007 ஆம் ஆண்டு மாதா சிலையில் இரத்தம் போன்ற துளிகள் காணப்பட்டன. கிறிஸ்தவ மதத் தலைவர்களும் மக்களும் இந்த அசாதாரண நிகழ்ச்சியைக் கண்டனர். இது என்னத்தின் அறிகுறியோ என்று எண்ணியெண்ணி ஏங்குகிறார்கள். அயலவருடன் ஆலோசித்தனர். காலம் செல்லச் செல்ல அதன் பலன் கொஞ்சம் கொஞ்சமாக தெரிந்தது.

இரத்தக் காயங்களுடன் மன்னார் மாவட்ட மக்கள் மடுமாத கோயிலில் தஞ்சம் அடைந்தனர். நெஞ்சம் புண்ணாகி மடு மாதாவை தங்களை காப்பாற்றும் படி கெஞ்சினர். இராணுவத்தினரும் அவர்களின் எதிரிகளும் மும்முரமாக மோதினார்கள் .அப்பாவி மக்களும் இரத்தம் சிந்தினார்கள். செய்வது அறியாது தேவன் குளத்திற்கு அகதிகளாகச் சென்றார்கள். அதனால் மடு மாதாவும் அங்கு சென் றார்.

போர் மடுமாதாவை கும்பிடும் இடங்கள் எல்லாம் பரவியது. மக்களின் உடலில் இருந்து இரத்தம் துளி துளிகளாகச் சிந்துகின்றது. பத்திரிகைகளின் செய்திகளின் படி பத்தா யிரம் மக்கள் இரத்தம் சிந்திச் சிந்தி இறந்து விட்டனர். மேலும் 10 ஆயிரம் மக்கள் இரத்தம் சிந்திக் கொண்டு சித்திரவதைப்படுகின்றனர். இவைகள் தான் அந்த அதிசயத்தின் பலன்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க...)

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ கட்டுப்பாட்டை இழந்து பரவுகின்றது

## இரு தீயணைப்பு படை வீரர் பலி

(அமெரிக்கா)

அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் வேகமாகப் பரவி வரும் காடடுத்தீயில் சிக்கி இரு தீயணைப்பு படைவீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

லொஸ்ஏஞ்சல்ஸ் வடக்கே பரவிய காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடு பட்டிருந்த போதே மேற்படி இரு தீயணைப்புப் படைவீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

தீ முழுமையாக கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பரவி வருவதாக மாநில ஆளுனர் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

இத்தீயானது லொஸ்ஏஞ்சல்ஸின் அனைத்துப் பிராதான தொலைக்காட்சி நிலை யங்களதும் ஒளிபரப்புக் கருவிகளின் இருப் பிடமாகவுள்ள தொலைத்தொடர்பாடல் கோபுரங்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




உயர் வெப்ப நிலை நிலவுவதன் காரணமாக தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பெரும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாவும் இத் தீயால் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட கட்டடங்கள் அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளதாவும் பிராந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.


அத்துடன் சுமார் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுவாசல்களை விட்டு இடம் பெயர உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் பஸடெனா எனும் இடத்தில் மேற்படி தொடர்பாடல் கோபுரங்கள் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையாக வரலாற்று முக்கியத்துவமிக்க விண்வெளி அவதான நிலைய மொன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் தீயால் இதுவரை 170 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுடைய காட்டுப்பிராந்தியம் எரிந்து கரிகியுள்ளது. மேற்படி தீயை அணைக்கும் பணி யில் சுமார் 2 ஆயிரம் தீயணைப்பு படை வீரர் கள் ஈடுபட்டுள்ளனர். (ஓ-4)

# ஐக்கியநாடுகள் சபையின்

## கால நிலைமாற்றம் தொடர்பான 5 நாள் மாநாடு ஜெனிவாவில் திங்கள் ஆரம்பம்



ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் கால நிலை மாற்றம் தொடர்பான 5 நாள் மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் கூடினர்.

வெள்ளம் வரட்சி போன்ற காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளிற்கு உதவுவதற்கான வழிமுறைகள் குறித்து இந்த உலக காலநிலை மாற்ற மாநாட்டில் கவனம் 6 சலுத்தப்படவுள்ளது.

சுனாமிகள் மற்றும் சூறாவளிகள் என்பன தாக்குவதற்கு முன்பே அது தொடர்பான எச்சரிக்கைகளை அனைவரும் பெறக்கூடிய வகையில் உலகளாவிய கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதையும் இம் மாநாடு நோக்காகக் கொண்டுள்ளது.

பூகோள வெப்பமாதலைக்குறைப்பதற்கு அத்தியாவசியமான எரிபொருள் பாவனை மற்றும் பச்சை இல்ல வாயு வெளியீடுகளை குறைத்தல் தொடர்பில் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப் பட மாட்டாது எனவும் அதற்குப் பதிலாக காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு எவ்வாறு உதவுவது என்பது குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் முன் கூட்டியே தகவல்களை பெற்றுக் கொள்ளுவதில் எதிர் கொண்டுள்ள குறைபாடுகளே பாரிய அழிவுகளுக்கு வித்திடுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பச்சை இல்ல வாயு வெளியீடுகளை குறைப்பது தொடர்பான 1997 ஆண்டு கயோடா உடன்படிக்கை குறித்து எதிர் வரும் டிசம்பர் மாதம் டென்மார்க்கில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ஓ-4)

# புலிக்குட்டியை தாய்போல் அரவணைத்து பராமரிக்கும் மனிதக்குரங்கு

மனிதக்குரங்கு ஒன்று இரு மாத வயதான புலிக்குட்டியை தாய்க்குத் தாயாக அர





வணைத்து பராமரித்து வரும் அதிசய சம்பவம் அமெரிக்க தென்கரோலினாவில் இடம் பெற்றுள்ளது.

தாய்ப்புலியால் கைவிடப்பட்ட நிலையில் மைட்டில் கடற்கரையிலுள்ள அரிய அழிந்து வரும் விலங்கினங்களுக்கான புகலிடத்திற்கு எடுத்து வரப்பட்ட சியர்ரா என்ற வெள்ளை இனப் புலிக்குட்டியையே மேற்படி அஞ்ஜனா என்ற மனிதக்குரங்கு அன்பு காட்டி பராமரித்து வருகின்றது.

மூன்று வயதான அஞ்ஜனா மேற்படி புலிக் குட்டியுடன் மட்டுமல்லாமல் மித்ரா மற்றும் சிவா என்ற வேறு இரு புலிக்குட்டிகளுடனும் நெருக்கமாக பழகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# சந்திராயன் 1 இன்

## தொடர்புகள் துண்டிக்கப்பட்டமைக்கு கணனிகள் செயலிழந்தமையே காரணம்

(பனாஜி)

சந்திராயன்-1 விண்கலத்தில் உள்ள கணனிகள் முற்றிலும் செயலிழந்து போனதால் தான் தரைக்கட்டுப்பாட்டுத் தளத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விண்கலம் செயலிழந்தது என்று இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் உத்தியோக பூர்வ அறிவித்தலை தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டு விண்வெளி ஆய்வுத் திட்டத்துடன் கடந்த ஆண்டு விண்ணுக்கு செலுத்தப்பட்ட சந்திராயன்-1 விண்கலத்திற்கும் தரைக் கட்டுப்பாட்டுத் தளத்துக்கும் இடையிலான தகவல் தொடர்பு கடந்த சனிக்கிழமை திடீரென துண்டிக்கப்பட்டு விட்டது. இது குறித்து தெரிவிக்கையிலேயே நாயர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

செயலிழந்து போய் விட்ட 514கிலோ எடை கொண்ட சந்திராயன்-1 விண்கலம் இன்னும் ஓராண்டுக்கு நிலவின் வட்டப் பாதையில் இருக்கும். அதன் பின்னர் அது படிப்படியாக நிலவின் தளத்தில் விழுந்து மோதி விடும். நிலவின் சுற்றுச்சூழல், சூரியகதிர்வீச்சு, விண்வெளியில் காணப்படும் பல்வேறு சூழல்கள் ஆகியவற்றைத் தாக்குப்பிடித்து சந்திராயன்-1 கடந்த ஒக்டோபர் முதல் இருந்ததே மிகப் பெரிய சாதனை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

எனவே தான் எதிர்பாராத வகையில் சந்திராயன்-1 திட்டம் முடிவுக்கு வந்து விட்டாலும் கூட இது மிகப் பெரிய சாதனை வெற்றி என்றும் விஞ்ஞானிகள் உற்சாகத்துடன் கூறுகிறார்கள். (ஓ-4)

## விருந்துபசாரத்தில் துப்பாக்கிச் சூடு 8 பேர் பலி

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோவின் கடற்கரைப் பிராந்திய நகரொன்றில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வொன்றில் துப்பாக்கிதாரிகளால் நடத்தப்பட்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் 8பேர் பலியாகியுள்ளனர்.

சினாலோவா மாநிலத்திலுள்ள போலேவார்ட் நகரில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் 15 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (ஓ-4)

# சவூதி அரேபிய இளவரசர் மீதான தாக்குதலை எமது குழுவே நடத்தியது

## அல்-கொய்தா உரிமை கோருகிறது

(சவுதி)

சவுதி அரேபிய இளவரசரும் அந்நாட்டு பாதுகாப்புப்பிரிவின் தலைவருமான மொஹமட் பின் நஜாப் மீது கடந்த வாரம்மேற் கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு தாமே பொறுப்பென அல்கொய்தா போராளி குழு உரிமைகோரியுள்ளது.

இளவரசரின் அலுவலகத்தின் முன் தற்கொலை குண்டுதாரியொருவர் இந்தக் குண்டுதாரி ஒருவர் நடத்திய இந்தக் குண்டுத் தாக்குதலில் இளவரசர் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

கடந்த பெப்ரவரி மாதம் வெளிநாடுகளில் வாழும் தேடப்படும் 83 போராளிகளின் பெயர்ப்பட்டியலை சவூதி அரேபிய அரசங்கம் வெளியிட்டிருந்ததுடன் மேற்படி போராளிகள் நாடு திரும்பும் பட்சத்தில் அவர்கள் சாதாரண வாழ்க்கையை வாழ முடியும் என அறிவித்திருந்தது. (ஓ-4)

# சுவாட் பள்ளத்தாக்கில் உக்கிர மோதல் 30 போராளிகள் பலி-இராணுவம்

(இஸ்லாபாத்)

வட மேற்கு பாகிஸ்தானிலுள்ள சுவாட் பள்ளத்தாக்கில் திங்கட்கிழமை இடம்பெற்ற மோதல்களில் குறைந்தது 30 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் பயிற்சி நிலையமொன்றில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் பொலிஸ் படையணியில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களில் 17 பேர் பலியானதையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்ட போதே மேற்படி மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

சுவாட் பள்ளத்தாக்கின் பெரும்பகுதியை கடந்த ஜுலை மாதம் படையினர் மீளக் கைப்பற்றியதையடுத்து இடம்பெற்ற மிக மோசமான தாக்குதலாக ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் கருதப்படுகிறது. (ஓ-4)

## தொண்டர்ஸ்தாபனத்திற்கு நிதி சேகரிப்பதற்கான சாதனையை நிறைவேற்றும் சாகசக் கலைஞர் பிரெடி

(ஜேர்மனி)

ஜேர்மனியின் அதி உயரமான சக்ஸ்பிட்ஸ் மலைச்சரிவில் ஆயிரத்து 141 அடி உயரத்தில் கேபிள் கார் பயணிப்பதற்காக அமைக்கப் பட்டுள்ள மூவாயிரத்து 264 அடி நீளமான கம்பி இணைப்பில் நடந்து சுவிட்ஸர்லாந்து சாகசக் கலைஞரான பிரெடி நொக் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாதனை படைத்துள்ளார்.



இந்தச் சாதனையை நிறைவேற்ற அவர் எடுத்துக்கொண்ட நேரம் 50 நிமிடங்கள் மட்டுமேயாகும்.

மேற்படி சாதனையை சுமார் ஆயிரத்து 800 பார்வையாளர்கள் அவதானித்தனர்.

தொண்டர் ஸ்தாபனம் ஒன்றிற்காக 19 ஆயிரம் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதியைச்சேகரிக்கும் முகமாகவே அவர் இந்தச் சாதனையை மேற்கொண்டார். (ஓ-4)

## வன்னியில் அமைக்கப்பட்டுள்ளவை

# அகதிமுகாம்களல்ல சிறைக்கூடங்களே மக்கள் அவற்றைத் தகர்த்து வெளியேறுவார்கள்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா முகாம்களில் இருந்து 10 ஆயிரம் பேர் தப்பிச் சென்றுள்ளதாகக் கூறுவதை நம்ப முடியாது. உண்மையிலேயே அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அகதி முகாம்களன்றி சிறைக் கூடங்களே அங்கு அமைக்கப்பட்டுள்ளன. இந்த மக்களை விடுவித்து மீள்குடியேற்றத்தை அரசு துரிதப்படுத்தாவிடின் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் அனைவரும் தன்னிச்சையாகவே முகாம்களை நகர்த்தி அங்கிருந்து வெளியேறி விடுவர். எனவே யதார்த்த பூர்வமாக சிந்தித்து செயற்பட வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது என்றும் அக்கட்சி சுட்டிக் காட்டுகின்றது.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 20 அகதி முகாம் தொகுதிகளில் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் சுமார் இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் மீள் கணக்கெடுப்பின் பிரகாரம் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் முகாம்களில் இருந்து காணாமல் போயிருப்பதாக தெரியவந்துள்ளது என்றும் அவர்கள் முகாம்களை விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் வவுனியா அரச அதிபர் தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான விஜித்த ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள முகாம்கள் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணக் கிராமங்கள் என்று அரசாங்கம் கூறிக் கொள்ளலாம். ஆனால் அது நிவாரணக் கிராமங்களோ அல்லது அகதி முகாம்களோ அல்ல. அனர்த்தங்களின் போது அவசரத் தேவைகளுக்காக அமைக்கப்படுவதே அகதி முகாம்களாகும்.

ஆனால் வவுனியாவில் இது தலைகீழாக மாறியுள்ளது. இங்கு சிறைக் கைதிகளைப் போல் அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது நாளாந்த துயரங்களால் மக்கள் வதைக்கப்படுவது பாரதூரமானதாகும்.

அகதி முகாம்களாக அன்றி சிறைக்கூடங்களாக இருப்பதனாலேயே அங்கிருந்து மக்கள் தப்பிச் செல்ல முற்படுகின்றனர். தற்போது அரசாங்கம் கூறுவதுபோல் தப்பிச் சென்றுள்ள 10 ஆயிரம் பேரும் புலிச் சந்தேக நபர்களா அல்லது வேறு யாருமா என்பதை விட அவர்களின் இத்தகைய நிலைமைக்கு என்ன காரணம் என்பதை தேட வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர். அவர்களது செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டு விட்டன. இந்த நிலையில் அரசை நம்பி வந்துள்ள மக்களை தொடர்ந்தும் அடைத்து வைத்துக் கொண்டிராது அவர்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டிய தேவை மாத்திரமே எஞ்சியுள்ளது. இவர்களை தொடர்ந்தும் குற்றவாளிகளைப் போல் அடைத்து வைத்திருப்பதற்கு அரசுக்கு உரிமை இல்லை.

அரசுக்கு உதவும் முகமாக முகாம்களில் உள்ள மக்களை பார்வையிடுவதற்கும் அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்குமான சந்தர்ப்பங்கள் எதிர்க்கட்சிகளுக்கான எமக்கு மறுக்கப்படுகின்றன. ஆளுந்தரப்பினரின் ஒரு தலைப்பட்ச நடவடிக்கைகள் இந்நாட்டில் மேலும் பல சிக்கல்களுக்கே வழி வகுக்கப் போகின்றன என்றார். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மா

Botanical Name - Mangifera indica
Family - Anacardiaceae
Engl - Mango
Sing - Amba

பெரிய மரவகையைச் சார்ந்தது. பரந்த கிளைகளைக் கொண்டு சாதாரணமாக 6 முதல் 15 மீற்றர் உயரம் வளரக்கூடியது. இது காடுகளில் 30 மீற்றர் உயரம் வரை ஓங்கி வளரும். தண்டில் இலைகள் ஒன்று மாற்றி ஒன்றாகத் தோன்றுகின்றன. ஆனால் கொப்புக்களின் நுனியில் இலைகள் சற்று அடர்த்தியாகக் காணப்படும். 12-30 செ.மீ நீளத்திலும், 3-9 செ.மீ அகலத்திலும் ஈட்டிமுனை வடிவத்திலும் அடியும், நுனியும் குறுகியும் இலை ஓரங்கள் அலை அலையாக வளைந்தும் இருக்கும். பூக்கள் மஞ்சரியில் உண்டாகின்றன. மகரந்த தாள்கள் 4-5 எண்ணிக்கையில் சம உயரமாக இல்லாமலும், சம தடிமன் இல்லாமலும் இருக்கும்.

### பரம்பலும், இனவிருத்தியும்

இது வறட்சியிலும் பயன்தரக்கூடிய இலங்கை, இந்தியாவைச் சார்ந்த மரமாகும். விதை மூலமும், நெருக்கொட்டு மூலமும் இனவிருத்தி செய்யலாம். மாங்கன்றுகள் ஆடி முதல் புரட்டாதி வரை நடப்படுகின்றன.

### 100 கிராமிலுள்ள சத்துக்கள்

| சத்துக்கள் | மாங்காய் | மாம்பழம் | மாங் கொட்டைப் பருப்பு |
|---|---|---|---|
| புரதம் (கி) | 0.7 | 0.6 | 2.6 |
| கொழுப்பு (கி) | 0.1 | 0.4 | 4.2 |
| நார்ப்பொருள் (கி) | 1.2 | 0.7 | 0.9 |
| காபோவைதரேற்று (கி) | 10.1 | 15.9 | 35.99 |
| கல்சியம் (மி.கி) | 10 | 14 | 40 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 19 | 16 | 110 |
| இரும்பு (மி.கி) | 54 | 1.3 | 0.3 |
| தயமின் (மி.கி) | 0.04 | 0.08 | 0.21 |
| கரோட்டின் (மைக்ரோகிராம்) | 90 | 2743 | 20 |
| ரைபோ பிளோவின் (மி.கி) | 0.01 | 0.09 | 0.19 |
| விற்றமின் C (மி.கி) | 3 | 16 | 09 |
| மகனீசியம் (மி.கி) | 21 | 27 | -- |
| பொட்டாசியம் (மி.கி) | 83 | 205 | -- |
| சோடியம் (மி.கி) | 43 | 26 | -- |

### மருத்துவப் பயன்கள்

◆ மாமரத்தின் பூ, பிஞ்சு, காய், பழம், பருப்பு, இலை, பட்டை முதலியவை மருந்திற்கு பயன்படுகின்றன.

◆ மாம்பூவை நிழலில் உலர்த்தி குடிநீர் தயாரித்து காலை, மாலை அருந்தினால் நாட்பட்ட சீதபேதி குணமாகும், பசியுண்டாகும், சுவை மிகும். இரத்தம் சுத்தமாகும். இது பித்த மயக்கத்தை தீர்க்கும்.

◆ மா வடுவினை (உதிர்ந்த பிஞ்சுகளை) ஊறுகாயாக உபயோகிப்பது நன்று. இது வாய் நீருறல், பசியின்மை ஆகியவற்றை நீக்க வல்லது.

◆ மாம்பூவுடன் பச்சைக் கொத்தமல்லி, இஞ்சி, கறிவேப்பிலை, இலந்தை ஆகியவற்றை சமமாக சேர்த்து அரைத்து துவையல் போல் உட்கொண்டு வந்தால் குமட்டல் தீரும்.

◆ மாங்கொழுந்து காலங்களில் அவற்றை சேகரித்து நிழலில் உலர்த்திய பின் மாப்போல இடித்து அரித்து சேகரித்து வைத்துக் கொள்ளவும். காலை, மாலை உணவிற்கு முன் 5 கிராம் அளவு வெந்நீரில் போட்டு குடித்தால் நீரிழிவு கட்டுப்படும். எவ்வகையான பக்க விளைவும் ஏற்படாது. எல்லா வ்யதினரும் உபயோகிக்கலாம்.



◆ மாங்காயை நேரடியாக உண்பது உடல் நலத்திற்கு அவ்வளவாக நல்லதல்ல.

''மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டும்'' என்பது பழமொழி. இது எதனால் ஏற்பட்டுள்ள தென்றால், காரமிடாத ஊறுகாய் உமிழ் நீரை சுரக்க வைத்துஉணவை கூடுதலாக உட்கொள்ளச் செய்யும். மாங்காய் ஊறுகாய் பல வகைகளில்செய்யப்படுவதுண்டு.

◆ கழிச்சல் நோய் தொடர்ந்து உடையவர்கள் மாம்பருப்புடன் சமமாக கசகசா சேர்த்து அரைத்து வெறும் வயிற்றில் உட்கொண்டு வந்தால் கழிச்சல் நிற்கும்.

### வயிற்றுப் புண் நீங்க

◆ மாம்பருப்பை தோல் நீக்கிப் பயன்படுத்த வேண்டும். தோல் நீக்கிய பருப்பை இலேசாகத் தட்டி சட்டியில் போட்டு 100 கிராம் பருப்பிற்கு 300 மில்லி இளநீரை விட்டு மூடி விட வேண்டும். பின்னர் சிறு தீயாக எரித்து இளநீர் பாதி அளவாக சுண்டியதும் இறக்கி இளநீரை கீழே கொட்டி விட்டு பருப்பை மட்டும் தனியாக எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து, அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். காலை உணவு உண்பதற்கு முன்னும் மாலை ஆறுமணி அளவிலும் ஒவ்வொரு தேக்கரண்டி அளவாக 15 நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள வயிற்றுப் புண் ஆறும்.

◆ நாக்கில் ஏற்படும் புண்ணிற்கு மாம்பருப்பை எடுத்து அதை எலுமிச்சம்பழச் சாற்றில் அவித்து நிழலில் உலர்த்தி, இடித்துக் கொள்ளவேண்டும். காலை,பகல்,மாலைமூன்று வேளை உணவுக்கு முன்னும் ஒரு தேக்கரண்டி அளவு 3 நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள சூட்டினால் நாக்கிலேற்பட்ட புண் ஆறும்.

◆ மாம்பிசின் - 50 கிராம் மாம்பிசினை கழுவி பசும்பால் சேர்த்து வெண்ணெய் பதமாக வரும்வரை அரைத்துக் கொள்ள வேண்டும். இதை 3 பங்காக்கி காலை, பகல், மாலை 3 வேளையும் உணவிற்கு முன் அருந்தவும். வெள்ளை நோய் உடையவர்கள் நிறுத்தாது தொடர்ந்து 15 நாட்கள் உண்டுவர பலனளிக்கும்.

### மாம்பழம்

மாம்பழத்தை வெறும் சுவைக்காக மட்டும் கண்ட நேரத்தில் உண்பது பயனை அளிக்காது. முறையோடு மாம்பழத்தை உட்கொண்டால் உடல் நலமடைவதுடன், வயிறு தொடர்பான சில நோய்களும் குணமடையும்.

மாம்பழம் உண்டால் முகம் அழகாகுமென்பதில் சிறிதளவு உண்மையுள்ளது. ஆனால் தொடர்ந்து வரைமுறையின்றி உண்டுவந்தால் கழிச்சல் நோய்க்கு ஆளாக நேரிடும்.

### உண்ணும் முறை

மாம்பழத்தை காலை உணவுக்குப் பின் யாரும் சேர்த்துக் கொள்வதில்லை. அப்படி சேர்த்துக் கொண்டால் தீங்கொன்றும் ஏற்படாது.

குழந்தைகளுக்கு காலை உணவுக்குப் பின் மிகவும் குறைந்த அளவில் மாம்பழத்தைக் கொடுத்து வந்தால் குற்றமில்லை. பகல் உணவுக்கு பிறகு உட்கொள்வது மிகவும் நல்லது. உண்ட உணவு சீரணமாவதற்கும், மலக்கட்டு நீங்கவும் இப்படி உண்ணுவது உதவியாக இருக்கும்.

மாம்பழத்தை தனியாக உட்கொள்ள வேண்டியிருந்தால் உணவிற்கு இரண்டு மணி நேரத்திற்கு பின்னரோ அல்லது முன்னரோ உட்கொள்ள வேண்டும்.

இரவு உணவுக்குப் பின் உண்பது மிகவும் நல்லது. உட்கொண்ட பின் சிறிது பாலும் அருந்தலாம். குழந்தைகளுக்கு குறைந்த அளவில் மாம்பழத்தை கொடுத்து நிறையப் பால் கொடுப்பது மிகவும் நல்லதாகும்.

### மாம்பழமும், தேனும்

மாம்பழத்துடன் சிறிதளவு தேனும் சேர்த்து அருந்தினால் நல்லது. இதனால் வயிறு தொடர்பான நோய்கள் எளிதில் குணமடையும்.

மாம்பழமும், தேனும் கலந்து அருந்த ஏற்ற நேரம் மாலை ஆகும்.

இரவு உணவுக்கு பின்பு 30 நிமிடங்கள் கழித்து மாம்பழமும் பாலும் தொடர்ந்து அருந்தி வந்தால் முகம் அழகாகும். ஆண்மை மிகும். மாம்பழத்தை குளிர்பானமாக்கி கண்ட நேரத்தில் அருந்துவது உடல் நலத்திற்கு ஏற்றதல்ல.

### மாம்பழமும், பாலும் சோறும்

வேறு உணவுப் பதார்த்துங்களை நீக்கி விட்டு மார்ம்பழமும், பாலும், சோறும் மட்டும் உண்டு வந்தால் உடல் எடைகூடும். முகம் அழகாகும். வயிறு தொடர்பான நோய்கள் நீங்கும்.

### மாம்பழமும், மோரும், சோறும்

வேறு உணவுப் பதார்த்தங்களை நீக்கி மோரும், சோறும் உட்கொள்வது நல்லதாகும். உடல் வளமடையும்.

உமிழ் நீரை சுரக்க வைத்து பசியைத் தூண்டும். ஆனால் பசிக்கும் போது உண்டால் பசியை குறைத்துவிடும். சீரணத்தை எளிதாக்கும். வயிறு தொடர்பான சிறு நோய்களை எளிதில் நீக்கும். மலக்கட்டை போக்கும். மலட்டு தன்மையை நீக்கும். முகவரட்சியை நீக்கும். உடலிற்கு போதிய பலத்தை கொடுக்கும்.

◆ மாவிலைச் சாம்பலை தேங்காய் எண்ணெயில் குழைத்து பூசினால் புண்கள், தீக்காயங் கள் ஆறும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

◆ இலையை இடித்து பிழிந்த சாறு 40 மில்லி, நெய் 10 மில்லி, பால் 10 மில்லி, தேன் 20 மில்லி ஆகியவற்றை ஒன்றாகக் கலக்கி சேமித்து காலை, மாலை அருந்திவர மூலச் சூடு, உடல்வெப்பம் மூலத்தால் இரத்தம் வருதல் தீரும்.

# NORTH LANKA IIT

SUCCESS MAKES PERFECT

Main Street, Chankanai. / #113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
Phone:- 0217390110 , 0602214305 Web:- www.northlankaiit.com
www.nliit.com

Partner Institution of


**Isles Internationale Université EU/Commonwealth & Nottingham College of London**

New Batch!

## B. Sc. in Computer Science

**Duration :- 1-3 Years**
**Qualification :- HND, A/L, O/L**


2th Semester முடிவில்.... Cambridge Association of Managers - UK (Validated by UK Qualitity Assurance Commission and Endossed by Cambridge Acadamy of Management ) இனால் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.




4th Semester முடிவில் ........ Cambridge Association of Managers - UK (Validated by UK Quality Assurance Commission and Endossed by Cambridge Acadamy of Management ) இனால் Advanced Diploma சான்றிதழ் வழங்கப்படும்.




6th Semester முடிவில்..... Sri Lankan UGC அங்கீகாரமுடைய Degree சான்றிதழ் Isles Internationale Université Commonwealth இனால் வழங்கப்படும்.




**New Batches Start On 05/09/2009**

இவ் வருடம் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு Cambodia ஜனாதிபதியினால் Cambodiaவில் பட்டமளிப்பு விழா 27 November 2009 இல் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

## B.Sc. in Multimedia - 1st Year

எமது நிறுவனத்திலும் 2ம், 3ம் வருடங்களை வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பகுதி நேர வேலைவாய்ப்புடன் (மாதம் **$1500**) தொடரமுடியும்.

**யாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!**

சுமார் 60ற்கும் மேற்பட்ட மாணவர்களை வெளிநாடுகளுக்கு பகுதி நேர வேலைவாய்ப்புடன் அனுப்பியுள்ள **NOTTINGHAM COLLEGE OF LONDON DIRECTOR** யாழ் விஜயம்!

இவ்வரிய சந்தர்ப்பத்தினை உரியமுறையில் பயன்படுத்தி பயனடையுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*Excellent pathway for your future*

**Study in UK, Holland, Malta, New Zealand, Singapore**

**DIRECT ADMISSIONS AND INTERVIEW ON**

**September 04th, 05th, 06th 2009 at North Lanka IIT, Jaffna, 09:30 AM TO 04:30 PM**

04/09/2009 - 05/09/2009 (9:30-4:30) North Lanka IIT யாழ் நிறுவனத்தில்

**Meet Mr. Karan**

06/09/2009 (10:00-4:00) யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில்

Come along with your Educational certificates (G.C.E (O/L), A/L, Diploma, Degree) certificates and copy of your passport.

**BENEFITS TO OUR CLIENTS**

↗ **Guidance by Lawyers, experienced professionals.** ↗ தவனை முறையில் கட்டணம் ↗ பகுதி நேர வேலை வாய்ப்பு ↗ இரண்டு மாதத்திற்குள் Resident Permit approval பெற்றுத்தரப்படும் ↗ ஆகக் குறைந்த தகைமை **G.C.E (O/L)** உடன் விண்ணப்பிக்கலாம் ↗ **Diploma / Advanced Diploma** உள்ளவர்களுக்கு Exemption வழங்கப்படும் ↗ **IELTS / TOEFL** தேவை இல்லை ↗ ஒரு வருடத்தின் பின் நீங்கள் விரும்பிய நாடுகளுக்கு கல்வியை தொடர முடியும் ↗ Type of Visa - Schengen.

***This can be overcome by appearing for a Language Ability Test at the venue at a cost of € 20 (you will receive a certificate) & you will be eligible after passing the test for admission at certain universities & College!***

(C-3219)

## நல்லூர் ஸ்ரீ வைகுந்த கைலாஷ் ஆச்சிரமத்தில்

# தெய்வீக வாழ்வு வாழ்ந்து அடியார்களுக்கு அருளாசி வழங்கிய 'முக்தானந்த சரஸ்வதி' அம்மா



நல்லூர் சூழலில் வாழ்ந்த பெண் துறவி முக்தானந்த சரஸ்வதி (சுவாமி அம்மா) 21.06.1922 இல் அவதரித்தார். இவர் வட இந்திய ரிஷிகேசத்தில் சுவாமி சிவானந்த மகரிஷியிட ..ம் 19 ஆவது வயதில் தீட்சை பெற்று ஈழ..த்தில் இலை மறைகாயாய் வாழ்ந்தார்.

இவர் ரிஷிகேசம் சுவாமி சிவானந்த மகரிஷியின் முதலாவது இலங்கைப் பெண் சிஷ்யையும் .. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த யோக சுவாமி ..களின் அருளாசி பெற்று தெய்வீக வாழ்வ.. வாழ்ந்த வரும் ஆவார்.


இ ..வர் இலங்கை மக்களுக்கு அருளாசி பொழிய யாழ்ப்பாண மண்ணில் 87 வருடங்கள் வாழ்ந்து தெய்வீக அருட் பார்வையால் அடியார்களை அரவணைத்து ஆனந்த வாழ்வளித்து வந்தார்.

நல்லூர் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள "ஸ்ரீ வைகுந்த கைலாஷ்" ஆச்சிரமத்தில் தெய்வீக வாழ்வை தொடர்ந்தார்.

இவ் ஆச்சிரமம் 1952 ஆம் ஆண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1955 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தெய்வீகப் பொக்கிஷமாக திகழ்ந்தவரை 1996 ஆம் ஆண்டின் பின் பல துறவிகள், ஞானிகள் தரிசிக்க வந்து சென்றுள்ளனர். இவர் ஆச்சிரமத்தின் மிரு கங்கள் மீது அன்புள்ளவராகவும் இருந்தார். பல பசுக்களையும் வளர்த்தார்.

இந்திய மத்திய பிரதேசம் உட்பட பல ஆச்சிரமங்களில் சுவாமி அம்மாவை இருக்குமாறு பலபேர் வேண்டினார்கள். "அம்மா" சொன்னா "பிறந்த மண்ணில் இன்னலுடன் வாழும் மக்களுக்கு - எமது சாதனைகள் மூலம் ஓரளவாவது அமைதியைக் கொடுக்க



வேண்டும். அதற்காக நாம் யாழ்ப்பாணத்தில் இருக்க வேண்டும். தெய்வீக சாதனைகள் மூலம் - அருள் தெய்வீக அலைகள் மக்களுக்கு பாய்ச்ச வேண்டும். இதற்காக நாம் யாழ்ப்பாணத்தில் வாழ வேண்டும்" என்றார். அவ்வாறு வாழ்ந்தும் காட்டியுள்ளார்.



தெய்வீக வாழ்வு வாழ்ந்த முக்தானந்த சரஸ்வதி (சுவாமி அம்மா) 17.08.2009 இல் சமாதி அடைந்தார். அம்மாவின் இறுதி யாத்திரையில் பல இளைஞர்கள், பெரியவர்கள், பெண்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்மாவோடு அவரின் பணிகளில் ஈடுபட்டவர்கள் சிந்தித்தவர்கள் எல்லோருக்கும் என்றும் அம்மாவின் அருளாசி நிறையவே உண்டு.

*அம்மாவின் அன்பர்கள்*

# ஜானக பெரேரா கொலைவழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க பிரதான சந்தேக நபர் இணக்கம்

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 36 பேரது படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான சுதாகரன் சண்முகநாதன் ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதனை ஏற்றுக்கொண்ட அநுராதபுரம் பிரதான நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான தர்ஷிகா விமலசிறி ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதை எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அநுராதபுரம் நீதிமன்ற நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் அனைவரினதும் விசாரணை நடவடிக்கைகள் நிறைவுக்கு வந்துள்ளதாகவும், இவர்கள் அனைவருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது தொடர்பில் சட்டமா அதிபரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இரகசியப் பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இதேவேளை, மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் கொலையுடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேக நபர்கள் தொடர்பிலான தகவல்களும் கிடைத்துள்ளன என்று தெரிவித்த இரகசியப் பொலிஸார், இவர்களைக் கைது செய்வதற்கென கண்டி மற்றும் வவுனியா பொலிஸ் பிரிவுகளின் கூட்டு விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை தற்போது தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கின்ற அதேவேளை, விஷேட பாதுகாப்புடன் தனி அறையில் வைப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கு அனுமதியளித்த அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம், பிரதான சந்தேக நபரின் ஒப்புதல் வாக்குமூலம் பெறுகின்ற நடவடிக்கையை 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் ஏனைய சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

(ஓ-4)

# 30 வருடங்களின் பின் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்

## அமைச்சர் பியசேன கமகே


(கொழும்பு)

30 வருடங்களின் பின் இன்று சகல மக்களும் நிம்மதியாக வாழக்கூடியதொரு சூழல் ஏற்பட்டுள்ளது என்று காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தொழில் பயிற்சி தொழில்நுட்ப அமைச்சருமான பிய சேன கமகே தெரிவித்தார்.

காவத்தை வெள்ளாந்துறை ருவன்புர தேசிய கல்விக் கல்லூரியில், பாராளுமன்றத்திற்கு பிரவேசித்து 20 வருட பூர்த்தியினை தொடர்ந்து இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(ஓ-5)













டாடா நிறுவனத்தின் ஏக விநியோகஸ்தர்களாக டிமோ (Dima) நிறுவனத்தினர் நேற்று தமது காட்சியறையை ஸ்ரான்லி வீதியில் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் பணிப்பாளர்கள் மங்கள வாத்திய இசையுடன் அழைத்து வருவதை முதலாவது படத்திலும், நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே. பண்டித்த காட்சியறையை திறந்து வைப்பதனை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் பணிப்பாளர்கள் மதவழிபாட்டில் ஈடுபட்டிருப்பதனையும் முதலாவது விற்பனையில் (E.S.P) நாகரத்தினத்திற்கு டாடா லொறி ஆவணங்களை வழங்கி வைப்பதையும், வர்த்தகர் ஒருவருக்கு வாகனத்தை கையளிப்பதையும் அடுத்து வரும் படங்களில் காணலாம்.

> மனிதன் சுதந்திரத்தோடு பிறக்கிறான். ஆனால் எங்கும் அடிமைத்தளையில் பிணைப்புண்டுகிடக் கிறான்.
>
> ~ ஓர் அறிஞர்

வலம்புரி

## தமிழ் மக்களுக்கு எதிராக கருத்துரைப்போரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்!

சட்டம் என்பது சகலருக்கும் சமனானது. சட் டங்களை ஆக்கும் போது அதில் இன,மத மொழிச் சார்பு இருத்தல் ஆகாது.

எனினும் சில நாடுகளில் சட்டவாக்கங்கள் பக்கசார்பு உடையவையாக அமைந்து விடுகின் றன. இந்தப் பரிதாப நிலைக்கு இலங்கை விதி விலக்கல்ல.

இலங்கையின் சட்டவாக்கங்களை உருவாக்கு வதற்கு முன்னதாக அது தமிழ் மக்களுக்குசாத கமாக அமைந்துவிடுமா? என்ற ஆய்வே முத லில் கவனிக்கப்படுகின்றன.

சிங்கள மக்களுக்கு சார்பாகவும் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு பாதகமாகவும் அமையும் வகையில் சட்டங்களை இயற்றும் எண்ணக்கரு நீண்டகாலமாக சிங்கள சட்டவாக்க வல்லுநர் களிடம் நிலைபெற்றுள்ளது.

இதன் தாக்கம் 1972இல் இலங்கைக்கான குடியரசு சட்டவாக்கத்தை தயாரித்த கொல்வின் ஆர்.டி.சில்வாவிடமும் எதிரொலித் திருந்ததை காணமுடியும்.

சிங்களம் மட்டுமே இந்த நாட்டின் அரச கரும மொழி என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது அதனை எதிர்த்தவர் கொல்வின் ஆர்.டி.சில்வா.

ஒரு மொழி என்றால் இரு நாடு, இருமொழி என்றால் ஒருநாடு எனக்கூறிய கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்கள் 1972இல் இலங்கை குடியரசு உரிமையைப் பெற்றபோது சட்டவாக் கத்தை தயாரிக்கும் சந்தர்ப்பத்தை பெற்றார்.

அப்போது நாடாளுமன்றத்தில் தான் கூறிய ஒரு மொழி இருநாடு என்ற விவகாரத்தை அவர் மறந்துவிட்டார். எப்படி இருக்கிறது நிலைமை?

தமிழர் விடயத்தில் சிங்கள அரசியல் தலை வர்கள் மறதிக்கு ஆட்படுவது இந்த நாட்டின் மிகப் பெரும் துயரமாகும்.

அதாவது எதிர்க்கட்சியாக இருக்கும் போது தமிழர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டும், தமிழ்த்தலைவர்களுடன் பேசவேண்டும் என் றெல்லாம் கூறுவார்கள்.

ஆனால் இவ்வாறு கூறியவர்கள் ஆட்சிப் பீடம் ஏறியதும் எதிர்க்கட்சியாக இருந்தபோது கூறியதை மறந்து விடுவார்கள். இது இலங்கை யின் தேசிய வழமையாகிவிட்டது. இதன் காரண மாகவே இலங்கை இனப்பிரச்சினை இந்தளவு தூரம் விரிந்து பரந்து வரலாறு மன்னிக்க முடி யாத–எந்தக் காலத்திலும் இன ஒற்றுமை பற்றி பேச முடியாத அவல நிலையை தோற்றுவித் துள்ளது.

எதுவாயினும் இப்போது கூட, இலங்கைத் திரு நாட்டில் சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென யாரேனும் விரும்புவார் களாயின் இலங்கை பிரஜைகள் அனைவரும் சம உரிமையுடன் வாழும் சட்டவாக்கம் உருவாக் கப்படவேண்டும்.

அதுமட்டுமல்ல,யார் இனத்துவேசமாக பேசு கிறார்களோ அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். தனித்து அரசுக்கு எதிராக–தமிழ் மக் களுக்கு ஆதரவாக பேசுவோர், எழுது வோரை மட்டும் தண்டிக்காமல் தமிழ் மக்களுக்கு அல் லது சிறுபான்மை இனத்துக்கு எதிராக பேசு வோர்–எழுதுவோர் மற்றும் கூட்டங்கள், பத்திரி கையாளர் மாநாடுகளில் கருத்துரைப்போரை யும் சட்டத்தின்முன் நிறுத்தி இருபது ஆண்டு களுக் குக் குறையாத தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இதைச் செய்ய அரசு தயாரா? அப்படியானால் பல முக்கிய தலைவர்களுக்கு–அதிகாரிகளுக்கு இருபது வருட சிறைத்தண்டனை சர்வ சாதாரண மாகக் கிடைக்கும் அல்லவா?

## உள்ளூராட்சி சபைகளின் சிறந்த செயற்பாடுகளுக்கு பொறுப்பானவர்கள் இணைந்து செயற்பட வேண்டும்

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப்பாளர் குருகே

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் சிறப்பான செயற்பாடுகளுக்கு அவற்றில் அங்கம் வகிக்கின்ற அரசியல் வாதிகள், அவற்றின் அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் ஆகிய மூத்த தரப்பி னரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று மாற்றுக் கொள் கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் இணைப்பாளர் லயனல் குருகே தெரிவித் துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற வவுனியா நகரசபைக்கான தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வவு னியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வவுனியா நகரசபை மற்றும் செட்டிகுளம், பம்பைமடு உள்ளிட்ட பிரதேச சபைகளின் செயலாளர்கள் வவுனியாவில் உள்ள ஊடகவிய லாளர்கள் ஆகியோருக்கான ஒரு நாள் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கி அவர் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார். இக் கருத்தரங்கை மாற்றுக் கொள்கைக ளுக்கான நிலையம் ஒழுங்கு செய்திருந்தது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் அனைத்து அடிப்படைத் தேவைகளை யும் உள்ளடக்கிய பணிகளில் உள்ளூராட்சி சபைகள் தமது சேவைகளை ஆற்றி வருகின்றன. இவற்றிற்குப் பொறுப்பாக இருந்து அந்தச் சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மக் கள் பிரதிநிதிகள் ஒருபுறத்திலும் அரச அதிகாரிகள் ஒருபுறத்தி லுமாகச் செயற்படுகின்றார்கள்.

ஜனநாயக நடைமுறையின் அடிப்படையில் இவர்களது சேவைகள்,பணிகள் குறித்து ஊடகவியலாளர்கள் செய்தி அறிக் கைகளை வெளியிட்டு வருகின்றார்கள். ஆயினும் அண்மை யில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களில் மிகவும் குறைந்த அளவிலான செய்திகளே வெளியிடப்பட்டு வருகின்றன என் பது தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் தேசிய மட்டத்திலான ஊடகங்களில் இன்னும் கூடிய அளவில் உள்ளூராட்சி சபைகள் தொடர்பான செய்திகள் வெளியிடப்பட வேண்டும். இதற்கு அரசியல்வாதி கள், அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோரிடையே நெருக்கமான உறவும், புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும். அந்த வகையில் உள்ளூராட்சி சபைகளின் பணிகள் சிறப் பாக இடம்பெறுவதற்கு வழி ஏற்படும்.

இதேவேளை வவுனியாவில் உள்ள பொதுமக்கள் தமது உள்ளூர் செய்திகளுக்கு கொழும்பில் இருந்து வெளி வரு கின்ற தேசிய மட்டத்திலான ஊடகங்களில் மாத்திரம் தங்கியி ராமல் யாழ்ப்பாணத்தைப் போன்று வவுனியாவுக்கென உள் ளூரில் செய்திப் பத்திரிகைகளை வெளியிடுவதற்கான முயற் சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றார். (ஓ–4)

## இரத்துச் செய்த வீடமைப்பு கடன்களை மீளச் செலுத்துமாறு கோருகின்றது அதிகார சபை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸா இரத்துச் செய்த வீடமைப்புக் கடன்களை மீளச்செலுத்துமாறு கோரி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கடிதங்களை அனுப்பியுள்ளதால் மக்கள் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதோடு தமது வீடுகள் பறிபோய் விடுமோ என்று அஞ்சுகின்றனர் என்று ஐ.தே. க தெரிவித்துள்ளது.

கொழும்பில் எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ இத னைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறிய தாவது, மறைந்த ஜனாதிபதியும் எனது தந்தையுமான ரணசி ங்க பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் ஒரு இலட்சம், 10 இலட்சம் என்ற வீடமைப்புத்திட்டங்கள் அமைக்கப்பட்டு மக்க ளுக்கு வழங்கப்பட்டன.

சில வீடுகள் குறைந்த வட்டிக்கு கடனாக வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட வீட்டுக்கடனை தான் ஜனாதிபதி ஆனதும் இரத்துச் செய்வதாகவும் உறுதியளித்தார். ஜனாதிபதியாக பதவியேற்றதும் தான் உறுதிஅளித்ததன் பிரகாரம் கடன்களை இரத்துச் செய்தார்.

1987-1993 வரை இரத்துச் செய்யப்பட்ட கடனையும், வட்டி யையும் செலுத்துமாறு எவ்வாறு கோர முடியும். அதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் 2007 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டத்தை முன் வைத்து உரையாற்றும் போது வீட்டுக் கடன்களை இரத்துச் செய்வ தாகவும் தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனையிலும் இது தொடர்பாக உறுதியளிக்கப் பட்டுள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் 16 வருடங்க ளுக்குப் பின்னர் வீட்டுக்கடனை வட்டியோடு திருப்பிச் செலுத்து மாறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சில வீட்டு உரிமையாளர்கள் நீதிமன்றம் வரை செல்லப்பட் டுள்ளனர். இந்தக் கடிதங்களால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட் டுள்ளது. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஏன் இவ்வாறு திடீர் முடிவினை எடுத்தது என்பது தொடர்பில் தேடிப் பார்க்கை யில் சபை நஷ்டத்தில் இயங்குவதால் ஊழியர்களுக்கு சம்ப ளம் வழங்க முடியாமல் இருப்பது என்பது தெரியவந்தது. (ஓ–4)

## இலங்கையின் ஆயத்த ஆடை ஏற்றுமதி தொடர்ச்சியாக இரு மாதங்கள் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதித்துறை கடந்த யூன் மாதத்தில் இருந்து தொடர்ந்து இரண்டாவது மாதமாக வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. மனிதஉரிமை மீறல் களில் ஈடுபட்டு வருவதுடன் மூன்று இலட்சம் மக்களை நாசி பாணி வதை முகாம்களில் தடுத்து வைத்திருக்கும் இலங்கை யின் ஆயத்த ஆடைகளை கொள் முதல் செய்யாதீர்கள் என மேற்குலக நாடுகளில் புலம் பெயர் தமிழர்கள் தொடர்ச்சியான பரப்புரை நடத்தி வரும் நிலையில் இந்த வீழ்ச்சி ஏற்பட் டுள்ளது.

புள்ளி விபரங்களின் படி நாட்டின் மிகப் பெரிய ஏற்று மதித்துறையான ஆயத்த ஆடைகள் துறையின் வருமானம் கடந்த ஆண்டு யூன் மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு 5.6 வீதத்தினால் குறைந்துள்ளது.

மே மாத விற்பனை நிலைவரம் இதனை விட மோசமா னதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு மே மாதத்தில் இடம்பெற்ற விற்பனையை விட இந்த ஆண்டு 22.23 வீதம் விற்பனை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக யூன் மாதத்தில் ஏற்பட்ட விற்பனை வீழ்ச்சிக்கு அமெரிக்காவில் ஆடைகள் வாங்குவது குறைந் ததே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவுக் கான ஏற்றுமதியில் 21.6வீதத்தால் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இருப்பினும். ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதி 2008ஆம் ஆண்டு மே மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 10.8 வீதத்தால் அதிகரித்துள்ளது.

2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆயத்த ஆடை களின் ஏற்றுமதி 2009 ஆம் ஆண்டு தொடக்கம் காலாண் டுக்காலப்பகுதியில் 8.8 வீதத்தால் உயர்ந்திருந்தது. ஆனால் அரை ஆண்டு முடிபில் மொத்த ஏற்றுமதி 2.4 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2010ஆம் ஆண்டு இளவேனில் காலத்திற்கு என வழங்கப்பட்ட கொள்முதல் கட்டளைகளுக் கான துணி மணிகளை சிறிய நிறுவனங்கள் ஒக்டோபரில் ஏற்றுமதி செய்ய தொடங்கியதும் இந்த வீழ்ச்சி சரி செய்யப் பட்டு விடும் என ஆடை ஏற்றுமதி வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் தேவைகள் குறைந்திருப்பதும் விலை போட்டியுமே ஆடை ஏற்றுமதி வீழ்ச்சிக்கான காரணம் என்று அதிகாரிகள் தெரிவிக்கின் றனர். (ஓ–4)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


### நம்பிக்கையும் வலிமையும்



நம்பிக்கை நம்மிடத்தில் நம்பிக்கை நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை–இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும். உங்கள் முப்பத்து மூன்று கோடிப்புராண தெய்வங்களிடத்தும் மேலும் அவ்வப்போது உங்களிடையே அன்னிய நாட்டவர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிடத்தும் நம்பிக்கை இருந்து ஆனாலும் உங்களிடத்தே நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுக்குக் கதி மோட்சம்மில்லை. ஆன்மாவில் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே அப்படி நினைப்பது சமயத்திற்கும் மிகப்பெரிய முரண்பட்ட கருத்தாகும். பாவம் என்பது ஒன்று உண்டு என்றால் அது நான் பலவீனமானவன் மற்றவர்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வது ஒன்றுதான்.

## கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின்

# சுனாமி வாழ்வாதார செயற்றிட்டத்தினால் மீன் பிடி வலைகள் வழுங்கப்பட்டன



கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் சுனாமி வாழ்வாதார செயற்திட்டத்தினால் பொன்னாலை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச்சேர்ந்த பயனாளிகளுக்கு 1.2 மில்லியன் நிதிச் செலவில் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கரித்தாஸ்-கியூடெக் இயக்குனர் அருட்பணி கி. ஜோ.ஜெயக்குமார் அடிகளார் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வலைகளை அன்பளிப்புச் செய்தார்.

மேலும் இயக்குனர் அவர்கள் உரை நிகழ்த்துகையில் நவீன தொழில்நுட்பங்கள் கடல் தொழிலில் பாவிக்க வேண்டும் என்றும் இதனால் குறைந்த நேரத்தில் குறைந்த ஊழியர்களுடன் நிறைந்த வருமானத்தை பெற முடியும் என்றும் கடல் வளம் மக்களின் பெருக்கத்திற்கு ஏற்ப அதிகரிப்பதில்லை. எனவே நாம் மீன் பிடி தவிர கடல் பாசியைக் கொண்டு ஜெலி உற்பத்தி செய்வது போன்று கடல் கனிமங்களைக்கொண்டு பல்வேறு பட்ட உற்பத்திகளைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்றும் கடல் சங்கத் தலைவர்கள் புதிய தொழில் நுட்பங்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும். நவீன யுகம் அறிவியல் சார் மூலதனத் தைக்கொண்ட பொருளாதாரமாக மாற்றம் அடைந்துள்ளது. எனவே கடற்றொழிலாளிகள் தம் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற் படவேண் டும் என்றும் .மீன் பிடி வலை தயாரிக்கும் தொழிற் சாலை குருநகரில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு வருவதா கவும் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. நியாய விலையில் யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார். (ஓ-5)

# பெண்களை முன்னேற்றுவதற்கு அமைச்சின் ஊடாக 'திட்டங்கள்

## அமைச்சர் இராதாகிருஸ்ணன்

சர்வதேச பெண்கள் தினத்தோடு மட்டும் நின்று விடாமல் பெண்களை பல்வேறு துறைகளில் முன்னேற்றுவதற்கும் அவர்களை பொருளா தார ரீதியாக உயர்வடையச் செய்வதற்கும் அமைச்சு புதிய பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது என்று மத்திய மாகாண கைத் தொழில் மகளிர் விவகார அமைச்சர் வி.இராதா கிருஸ்ணன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்துகருத்துத் தெரிவிக்கையில் ஆற்றல் மிக்க பெண்களுக்கு நமது அமைச்சின் மூலம் கைத்தொழில் பயிற்சிகள் வழங்கப்படு கின்றன. இதன் பின் சுய தொழில்களில் ஈடுபடுவோருக்கு சுற்றத்தார் மூலமாக எவ்வித பொருளாதார உதவியும் கிட்டாததால் அத்தகையோருக்கு உதவி செய்யவே அரசாங்கம் கந்துரட்ட அபிவிருத்திவங்கியை ஏற்படுத்தியுள்ளது என்றும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களது உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வது பற்றி கவலைப்பட வேண்டியதில்லை எனவும் அவர்களுக்காக அமைச்சு பொருட் களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது எனவும் தெரிவித்தார். (ஓ-4)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சில் உள்ள உளவள்த் துணை உதவியாளர் பதவிக்கு உரிய தகைமைகள் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி இம்மாதம் 30 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செயலாளர் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு 5 ஆம் மாடி செத்சிறிபாய பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

✡ ✡ ✡

இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்கு பதவி வெற்றிடங்களின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படி வத்தினை பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் , இலங்கை பரீட்சைத் திணைக்களம் பெலவத்த பத்ர முல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

✡ ✡ ✡

ஆரம்ப வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தருக்குமான திணைக்களப் பரீட்சைக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக் கூடிய வாறு இல- 385 வணபத்தேகம விமல் வங்சதேரர் மாவத் தை கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத்த பாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

விபரங்களை 28.8 .2009 வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக்காரியாலயத்திலோ நேரில் பார்வையிடலாம். (ஓ)




கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் பெரியவிளான், சகாயபுரம் ஆகிய கிராமங்களில் இரண்டு முன் பள்ளிகள் தளபாட மற்றும் மினசார வசதிகளு டன் 3.6 மில்லியன் நிதிச் செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட குரு முதல்வர் அருட் கலா நிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்து முன்பள்ளிகளை திறந்து வைப்பதையும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.ஜோ.ஜெயக் குமார் அடிகளார் கலந்து கொண்டு பெயர்ப் பலகையைத் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணத்தில் அருத்தருத்து ....

**06ஆம் பக்கத் தொடர்ச்சி**

**அசாதாரண நிஷா சூ[illegible]யின் பலன்கள்**

500 ஆண்டுகளுக்கு முன் தமிழர் வாழ்ந்த இடங்களைப் பிடித்த போர்த்துக்கேயரினால் தமிழரின் கோயில்கள் வீடுகள் முதலியன அளிக்கப்பட்டன. அதற்குப் பின் அழிவுகள் சற்றுக் குறைந்ததால் சிறு கோயில்கள் அமைக்கப்பட்டன. நூற்றாண்டுகள் வாழக்கூடிய மகோகனி,ஆல்,வேம்பு,அரசு , புளி முதலிய மரங்கள் நடப்பட்டன. அவைகள் சராசரி 300 ஆண்டுகள் வளர்ந்து மக்களுக்கு பற்பல நன்மைகளை அளித்தன. 26.11.2008இல் வீசிய நிஷா சூறாவளியினால் அனைத்து மரங்களும் வேரோடு சாய்ந்தன. அதற்குப் பின் முன்னொரு காலம் இல்லாதவாறு யாழ்ப்பாணத்தில் வறுமை ,கொலை ,கொள்ளை வழிப்பறி முதலியன நிகழ்கின்றன.

**மாதாவின் நடனமும் வியர்வையும்**

நாவாந்துறையில் உள்ள ஒரு பண்புள்ள ஒரு கிறிஸ்தவ வீட்டுக்கு அவரின் உறவினரான ஒரு சிறுமி சென்று வேறு சிறுமிகளுடன் விளையாடிக்கொண்டிருக்கையில் அச் சிறுமி திடீர் என அவ்வீட்டில் உள்ள மாதா சிலையை பார்க்க வேண்டும் என்று அடம் பிடித்ததாகவும் அதனால் 3 சிறுமிகள் மாதா சிலையைப் பார்த்த போது மாதா நிலத்தில் நின்று நடனமாடியதாகவும் அதை அறிந்த பெரியவர்கள் அங்கு சென்று நடனமாடிய மாதாவின் காலடிகள் நிலத்தில் பதிந்து இருப்பதைக் கண்டதாகவும் பின்பு அச் சிறுமிகளுக்கு காய்ச்சல் வந்ததாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டன.

சீமெந்துத் தரையில் மாதாவின் அடிகள் காணப்படும் படியாக அவர் நடனமாடினார். மடு மாதா இந் நாட்டில் நில நடுக்கம் ஏற்படப் போவதை தன்னை வணங்கும் சிறுமியின் மனத்தில் திருவருள் அலைகளினால் அவளைக் கவர்ந்து வீட்டில் உள்ள மாதா சிலையைப் பார்க்க வைத்துள்ளார். தன் சக்தியை அனைவரும் அறியும் பொருட்டு அம் மூவருக்கும் திருக் காய்ச்சல் ஏற்படுத்தியுள்ளார். இது நிலங்களில் நடுக்கம் ஏற்படுவதைக் குறிக்கின்றது.

அநியாயங்கள் கொலைகள் முதலிய பஞ்சமா பாதங்கள் தலை விரித்தாடும் நாடுகளில் நில நடுக்கங்களினால் சில பகுதிகள் அழிவது வழமையானது. உதாரணமாக கந்த புராணத்தில் சொல்லப்படும் மகேந்திரபுரி இலங்கையில் தெற்கு முனைக்கும் தெற்கில் இருந்த பகுதியில் இருந்தது. அங்குள்ள அசுர குணமுடைய மக்களைத் துன்புறுத்தி கொலை செய்தனர்.

எனவே தெற்கில் இருந்து வடக்கிற்குச் சென்ற நன் மக்கள் தமிழரின் கடவுளான முருகனிடம் முறையிட்டனர். எனவே இந்தியாவின் தெற்கில் உள்ள திருச்செந்தூர் வரை வந்து அசுர மக்களை அளிப்பதற்காக நில நடுக்கத்தை தோற்றுவித்து அம் மக்களை கடலில் ஆழ்த்தி அளித்தார். இதைவரலாறு கூறுகின்றது. வரலாறு மீண்டும் வரும் என் பது ஓர் உண்மை.

**சரிந்து விழுந்து கொப்புகள் வெட்டப் பட்ட அடி ஆல மரம் நிமிர்ந்து நிற்கும் அதிசயம்**

தமிழர் மணமக்களை வாழ்த்தும் போது ஆல்போல் தளைத்து அறுகு போல் வேரூன்றி வாழ்க என்பர். ஆலமரம் பல விழு துகள் விட்டு பரந்து செழித்து வளர்கின்றன. அதைப்போன்று தான் தமிழர் வாழ்ந்தனர். அவர்கள் பல கலைகளையும் கற்று பல கொப்புகள் போன்ற பல வளங்களுடன் வாழ்கின்றனர். ஆனரல் இப்போரினால் அவர்களுடைய கலைகளும் வளங்களும் அழிந்துள்ளன . வெட்டப்பட்ட இலைகளும் கொப்புகளும் அவைகளை முறையே குறிப்பிடுகின்றன. அதிசயமாக அடி மரம் நிமிர்ந்துள்ளது. இது மீண்டும் தமிழன் வளமுடன் வாழ்வான் என்பதைக் குறிக்கின்றது.

**வாழை மரத்தின் ஒரே தண்டில் 13 பொத்திகள் தோன்றியுள்ள அதிஷயங்கள்**

நல்லூர் செட்டித்தெருவில் உள்ள ஒரு தோட்டத்தில் . ஒரு வாழை மரத்தின் ஒரே தண்டில் 13 பொத்திகள் அசாதாரணமாகத் தோன்றியுள்ளன. 13 என்னும் எண் அதிர்ஷ்டம் இல்லாத எண் . சில வைத்திய சாலைகளில் 13ஆம் அறைகளில் சிகிச்சை பெற்ற நோயா ளர்கள் சிறந்த பலன்களைப் பெறவில்லை. அதனால் பல வைத்தியசாலை களில் 13ஆம் இலக்கத்தில் அறைகள் இருப்பதில்லை. 13ஆம் எண் சுகவீனத்தையும் குறிக்கும். இப்போது வன்னியில் உள்ள இரண்டு இலட் சம் தமிழர்கள் காட்டுப்பகுதிகளில் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு சுகவீனமானவர்களாக உள்ளார்கள். தற்போது 8ஆயிரம் தமிழர் அம்மை நோயினால் அவதிப்படுகின்றார்கள். பல நாடுகள் விமானம் விமானமாக மருந்துகளையும் வைத்தியர்களையும் அனுப்பியவாறு உள்ளனர்.

இவைகள் யாவும் யாழ். நகரில் ஏற்பட்ட அதிஷயங்களை விளக்குகின்றன. எனவே பஞ்சமா பாதகங்களை கைவிட்டு இறைவனை கைகூப்பி வணங்குங்கள்.

## பல திணைக்களங்கள் கலந்து கொள்ளும்

# நடமாடும் சேவையில் கலந்துகொண்டு உச்சப்பயன் பெற அரச அதிபர் அழைப்பு

*வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற வுள்ள நடமாடும் சேவை தொடர்பாக பூரண விபரங்கள் அடங்கிய, அரச அதிபர் க.கணேஷினால் அனுப்பி வைக் கப்பட்ட செய்திக் குறிப்பு இங்கு பிரசுர மாகிறது.*

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழான அனைத்து அரச நிறுவனங்களாலும் வழங் கப்படுகின்ற நடமாடும் சேவை ஒன்று இம் மாதம் 12,13 ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பொதுநிர்வாக உள்நாட் டலுவல்கள் அமைச்சின் வழிப்படுத்தலின் கீழ் நடைபெற உள்ளது.இதில் பின்வரும் அமைச் சுக்கள், திணைக்களங்கள் உட்பட 40 வரை யான அரச நிறுவனங்கள் கலந்து கொண்டு சேவையை வழங்கவுள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, தொழில் திணைக்களம்(ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேம இலாப நிதி யம்), ஓய்வூதியத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களம், கூட்டுறவு வியாபார சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர் வோர் பாதுகாப்பு அமைச்சு, வடக்கு மாகாண சபை, மாவட்டச் செயலகம், மாவட்ட பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், ஆட்பதிவுத் திணைக்களம், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, நீரியல் மற்றும் கடல்வள அபிவிருத்தி அமைச்சு, விவ சாய மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சு, தபால் திணைக்களம், குடிவரவு-குடியகல்வு திணைக்களம்(கடவுச் சீட்டு வழங்கல் பிரிவு), நீதி- சட்ட மறுசீரமைப்பு அமைச்சு;

இவ் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு யாழ். மாவட்ட மக் களைக் கேட்டுக்கொள்வதுடன் இது தொடர்பில் வழங்க வேண்டிய சேவைகள் தொடர்பாக இனங்கண்டு அவற்றை மாவட்டச் செய லகத் திற்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிப ரால் பிரதேச செயலாளர்கள், உதவி அர சாங்க அதிபர்கள், தொடர்புடைய ஏனைய உள்ளூர் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை இலகுவாக்கும் முகமாக கீழ் வரும் நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆவணங் கள், தகவல்கள் தரப்பட்டுள்ளன. எனவே உரிய செயலகங்களுடனும் சம்பந்தப்பட்ட திணைக் களங்களுடனும் சம்பந்தப்பட்ட அலுவலகர் களுடனும் தொடர்பு கொண்டு நடமாடும் சேவையின் உச்சப்பயனைப் பெற்றுக்கொள் ளுமாறு தயவுடன் வேண்டப்படுகிறார்கள்.

அடையாளம் காணப்பட்டுள்ள பொதுமக் கள் சேவைகளை வழங்கும் முக்கிய திணைக் களங்களினால் வழங்கப்படும் சேவைகளின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. ஏனைய விபரங் களும் விரைவில் பத்திரிகை மூலமாகத் தெரி யப்படுத்தப்படும்.

**1.ஆட்பதிவுத் திணைக்களம்**

**(அ).புதிதாக தேசிய அடையாள அட்டை பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்;**

1.பிறப்பு அத்தாட்சிப்பத்திர மூலப்பிரதி.

2.திருமணமானவராயின் திருமணப் பதிவுச் சான்றிதழ் மூலப்பிரதி.

3.தொழில் புரிபவராயின் பதவிப் பெயரை உறுதிப்படுத்திய 6 மாதங்களுக்குட்பட்ட கடிதம் அல்லது சான்றிதழ்.

4.தேசிய அடையாள அட்டைக்குரிய புகைப் படம் கலர் 6(முத்திரை அளவு (Stamp size).

5.முத்திரைக்கட்டணம் 15/= (ரூபா பதி னைந்து).

6.விண்ணப்பங்கள் அனைத்தும் தங்க ளுக்குரிய பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று, உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப் பித்தல் வேண்டும்.

**(ஆ). தேசிய அடையாள அட்டை புதுப் பித்தலுக்குத் தேவையான ஆவணங்கள்.**

1.உரிய மாற்றத்தினை உறுதிப்படுத்தற் கான சான்றிதழ்/ஆவணங்கள்.

2.தேசிய அடையாள அட்டைக்குரிய புகைப் படம் கலர் 6(முத்திரை அளவு (Stamp size).

3.முத்திரைக்கட்டணம் 15/= (ரூபா பதி னைந்து).

4.சேதமடைந்த தேசிய அடையாள அட்டை.

5.விண்ணப்பங்கள் அனைத்தும் தங்க ளுக்குரிய பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று, உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப் பித்தல் வேண்டும்.

**(இ).தொலைந்த தேசிய அடையாள அட் டை பெறுவதற்குத் தேவையான ஆவணங் கள்.**

1.தேசிய அடையாள அட்டை தொலைந் தமைக்கான 6 மாதங்களுக்குட்பட்ட பொலிஸ் அறிக்கை.

2.தேசிய அடையாள அட்டை புதிதாகப் பெறுவதற்குரிய சகல ஆவணங்களும் இணைக்கப்படல் வேண்டும்.

3.முத்திரைக்கட்டணம் 15/= (ரூபா பதி னைந்து).

4.விண்ணப்பங்கள் அனைத்தும் தங்க ளுக்குரிய பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று, உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப் பித்தல் வேண்டும்.

**2.குடிவரவு, குடியகல்வுத் திணைக் களம்**

**(அ).புதிதாக கடவுச் சீட்டு பெறுவதற் கான ஆவணங்கள்.**

1.பிறப்பு அத்தாட்சிப்பத்திர மூலப்பிரதி.

2.திருமணமானவராயின் திருமணப் பதி வுச் சான்றிதழ் மூலப்பிரதி.

3.தொழில் புரிபவராயின் பதவிப்பெயரை உறு திப்படுத்திய ஆங்கில மொழியிலமைந்த 6 மாதங் களுக்கு உட்பட்ட கடிதம் அல்லது சான்றிதழ்.

4.பிறப்பு அத்தாட்சிப்பத்திர ஆங்கில மொழி பெயர்ப்பு.

5.திருமணமானவராயின் திருமணப் பதி வுச் சான்றிதழ் ஆங்கில மொழிபெயர்ப்பு.

6.கடவுச் சீட்டு பெறுவதற்குரிய மூன்று மா தங்களிற்குள் எடுக்கப்பட்ட புகைப்படம் கலர் 3 (3.5 c.m x 4.5c.m).

7.கட்டணம்

☆சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டு ரூபா 2500(ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு).

☆☆மத்திய கிழக்கு நாடுகளை உள்ளடக் கிய குறிப்பிட்ட நாடுகளுக்கான கடவுச்சீட்டு ரூபா 1000(ரூபா ஆயிரம் மட்டும்).

☆☆☆இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய வற்றுக்கான அவசரகாலச் சான்றிதழ் ரூபா 500 (ரூபா ஐந்நூறு).

8.விண்ணப்பங்கள் அனைத்தும் தங்க ளுக்குரிய பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப் பித்தல் வேண்டும்.

**(ஆ).கடவுச்சீட்டு புதுப்பித்தல்/மாற்றங்கள்.**

1.புதுப்பிக்கப்பட வேண்டிய தேவையிலான ஆவணங்கள்.

2.பழைய கடவுச்சீட்டு.

3.அத்துடன் புதிதாகக் கடவுச்சீட்டுப் பெறு வதற்கான சகல ஆவணங்களும் சமர்ப்பிக் கப்படல் வேண்டும்.

4.மாற்றங்கள் ஏதுமிருப்பின் அது தொடர் பான அறிக்கை அல்லது உறுதிப்படுத்தற் கடிதம்.

5.மாற்றத்திற்குரிய கடவுச்சீட்டு.

6.மாற்றத்திற்கு/புதுப்பித்தலுக்குரிய கட் டணம் ரூபா 500(ரூபா ஐந்நூறு).

**(இ).தொலைந்த கடவுச்சீட்டு பெறுவதற் கான ஆவணங்கள்.**

1.தொலைந்தமைக்கான காரணத்தை விளக்கிய 6 மாதங்களுக்குட்பட்ட பொலிஸ் அறிக்கை.

2.புதுப்பித்தலுக்கான கட்டணம் ரூபா 10000(ரூபா பத்தாயிரம்).

3.புதிதாக கடவுச்சீட்டு பெறுவதற்கான சகல ஆவணங்கள்.

4.ஓய்வூதியத் திணைக்களம்.

ஓய்வூதியர்களால் விண்ணப்பிக்கப்பட்ட குடிசார், விதவை ஓய்வூதியங்கள் தொடர்பாக ஏற்ற நடவடிக்கை தாமதமாகிய ஓய்வூதியர்கள், விதவை அநாதை இலக்கங்கள் கிடைக்கப் பெறாத அலுவலர்கள் உரிய பிரதேச செயலர், கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிரச்சினைகளை மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் உரிய பிரதேச செயலரூ டாகச் சமர்ப்பிக்கலாம்.

**3.சமூக அமைச்சு, சமூக சேவைத் திணைக்களம்**

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கண் பார்வை குறைந்த சகல வயதினருக்குமான மூக்கு கண்ணாடி வழங்கல், முதியோர் அடையாள அட்டை வழங்கல் தொடர்பான கடமைகள் இடம்பெறும். இது தொடர்பாக உரிய பிரிவு பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விண்ணப் பங்கள், பிரச்சினைகளை மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் உரிய பிரதேச செயலாளரூடாக சமர்ப்பிக்கலாம்.

**4.தொழில் திணைக்களம்.**

அலுவலர்களின் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி(E.P.F. & E.T.F.)

தொடர்பான தங்களின் பிரச்சினைகளுக் கான ஆலோசனைகளை யும்,தீர்வுகளை யும் பெற்றுக்கொள்ளலாம்.

**5.பதிவாளர் நாயகம் திணைக்களம்**

இது வரை பதியப்படாத பிறப்பு,இறப்பு, திருமணப்பதிவுகளைப் பதிவு செய்தல் தொடர் பான விபரங்களை உரிய பிரதேச செயலாளர், உதவி மாவட்டப்பதிவாளர், கிராம அலுவலர் களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விண்ணப் பங்கள்,பிரச்சனைகளை மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் உரிய பிரதேச செயலாள ரூடாக அல்லது பிரிவுக்குரிய உதவிப்பதிவா ளரூடாக சமர்ப்பிக்கலாம்.

**6.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்.**

1.கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இதுவரை கிடைக்கப் பெறாத வாகன உடமை மாற்றம்.

2.வாகன அடையாள அட்டை, வாகனப் பதிவுச் சான்றிதழ்.

3.சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்.

4.வாகன இலக்கத் தகடு

5.புதிய வாகனப் பதிவுகள்

6.பழைய ஆவணங்களுடன் புதிய நடை முறைக்கமைய வாகனங்களைப் பதிவு செய்தல்.

ஆகியவை தொடர்பாக உரியவர்கள் ,உரிய பிரிவு பிரதேச செயலாளர், கணக்காளர், மோட்டார் போக்கு வரத்துத்திணைக்கள அலு வலர், கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விண்ணப்பங்கள், பிரச் சினைகளை மாவட்டச் செயலக நிர்வாகக்கிளை யில் உரிய பிரதேச செயலாளரூடாகச் சமர்ப் பிக்கலாம்.







யூனியன் அஷ்யூரன்ஸினால் அமைக்கப்பட்ட கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கான எல்லைக் கம்பத்தை யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றொசான் பெர்னான்டோ திறந்து வைப்பதையும் திறக்கப்பட்ட எல்லைக் கம்பத்தையும் யூனியன் அஷ்யூரன்ஸின் தலைமைப்பீட பிரதம நிறைவேற்று அதிகாரி மரீனா தர்மரட்ண தலைமையிலான அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

**யூனியன் அஷ்யூரன்ஸின் இரண்டாம் தரக் கிளை நேற்று பருத்தித்துறையில் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவிற்கு முன்னதாக ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அங்கிருந்து அதிகாரிகள் அழைத்து வரப்படுவதை முதலிரு படங்களிலும் கிளையினை யூனியன் அஷ்யூரன்ஸின் தலைமைப் பீட நிறைவேற்று அதிகாரி மரீனா தர்மரட்ண திறந்துவைப்பதையும் மற்றைய படத்திலும் காணலாம்.**







## வவுனியா நலன்புரி முகாமிலிருந்த...

இது தொடர்பில் தெரியவருவதாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதிச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அந்தப் பகுதிக்குள் அகப்பட்டுக்கொண்ட பொது மக்களை படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருமாறு அரசு அழைப்பு விடுத்தது.

இதன் பின்னர் 3 லட்சத்துக்கும் மேலான மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தனர். குறிப்பாக முள்ளிவாய்க்கால் சண்டை இடம் பெற்றபோதே பெருமளவிலான மக்கள் வந்தனர்.

எனினும் தரைப்படையின் பதிவுகளின்படி 2 லட்சத்து 80 ஆயிரம் மக்களே வருகை தந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதரகமும் இந்தப் புள்ளி விபரங்களையே வெளியிட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் இரு வாரங்களுக்கு முன்பாக வவுனியா மாவட்ட செயலாளர் ஏ.எஸ்.சம்.சார்ள்ஸ் மூலமாக வடமாகாண பிரதிபொலிஸ்மா அதிபருக்கு அறிக்கையிடப்பட்டது.

இது தொடர்பில் கருத்துக்களை அறிந்துகொள்ள மாவட்ட செயலருடன் தொடர்பு கொண்ட போது அவர் நாட்டிற்கு வெளியே சென்றுள்ளார் எனக் கூறப்பட்டது. எனினும் பெரும் எண்ணிக்கையில் ஆட்கள் குறைவதற்கான காரணம் என்ன என்பதையிட்டு உறுதியாகக் கூறமுடியாது உள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத, செயலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முகாம்கள் உருவாக்கப்பட்ட தொடக்க காலத்தில் மருத்துவமனைக்கு எனச் சென்ற பலர் திரும்பிவராதது தொடக்ககட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய தவறான கணக்கெடுப்பு என்பனவும் இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் குறைவு ஏற்படுவதற்கான காரணங்களாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் போர் முடிபுற்றதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் 70 முதல் 80 நாட்களுக்குள்ளேயே 15 ஆயிரம் பேரும் காணாமல் போயிருக்க வேண்டும். அப்படியாயின் நாள் ஒன்றிற்கு 180 முதல் 200 பேர் தப்பிச் சென்றிருக்கவேண்டும். இது நடைமுறையில் சாத்தியமானது அல்ல எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-1)

## வடக்கு மாகாண சபையின்...

அதாவது சுற்றுவட்டார அளவில் உள்ளது.

யாழ். நகரம் மக்கள் நெரிசலைக் கொண்டிருந்ததனாலும் அபிவிருத்தி செய்வதற்கு இடவசதி போதாமல் இருந்ததனாலும் இந்த இடம் தெரிவு செய்யப்பட்டது. கிளிநொச்சியைத் தெரிவு செய்வது தொடர்பாகவும் பேசப்பட்டது. கிளிநொச்சி விவசாய காணியாகக் காணப்பட்டதோடு அங்கு போதியளவு நீரும் இருந்ததனால் அதை விடுத்து மாங்குளத்தைத் தெரிவு செய்திருக்கிறார்கள். இரண்டு மூன்று வாரங்களிற்கு முன் அமைச்சரவையிலும் மகாண சபைகளிற் குரிய அமைச்சரால் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை அங்கு குடி நீர்ப் பிரச்சினை உள்ளது என்பது தொடர்பான கேள்வி ஒன்று எழுப்பப்பட்டுள்ளது அதாவது கைத்தொழில், நிர்வாக மையமாக விளங்குகின்ற அந்த இடத்தில் நீர் எந்தளவிற்கு போதுமானதாக இருக்கும் என்ற கேள்வி எழுப்பப்பட்டுள் ளமையால் இது தொடர்பான மீளாய்வினை மேற்கொள்வது தொடர்பான அபிப்பிராயம் ஒன்றும் நிலவிவருகிறது.

அமைச்சரவை முடிபுகளிற்கு ஏற்ப அந்த நகரத்தை கைத்தொழில் வர்த்தக நிர்வாக நகராக்குவது எவ்வாறு என்பது தொடர்பிலான திட்டங்கள் தீட்டப்படுகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமையே நீர் பிரச்சினை தொடர்பான கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு எனது யோசனை என்னவெனில் இது தொடர்பாக மீளாய்வினை மேற்கொள்ள வேண்டும் என்பதே என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## நாடு கடந்த தமிழீழ அரசு...

பிரதியாகவே வெளியிடப்படுகிறது. எனவும் அச்சுப் பிரதிகளாக பின்னர் வெளியிடப்படும் எனவும் செயற்குழு மேலும் தெரிவித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசு அமைப்பது பற்றிய செயற்திட்டம் அறிவிக்கப்பட்ட பின்னர்-அது தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களும் விவாதங்களும் பல்வேறு மட்டத்திலும் நடைபெற்று வருகின்றது.

இதனை ஒரு நல்ல அறிகுறியாகக் கருதும் செயற்குழு, இது அடுத்த கட்ட நகர்வுக்கு அத்தியாவசியமானது எனவும் ஆரோக்கியமான விவாதங்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதில்லை. மாறாகத் தெளிவினையே ஏற்படுத்தும் எனவும் கருதுகின்றது.

தற்போது வெளியிடப்படுகின்ற இந்த முதற்கட்ட விளக்கக் கோவை நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்பான கருத்துப் பரிமாற்றத்தை மேலும் வலுப்படுத்த துணை புரியும் எனவும் தாம் நம்புவதாக செயற்குழு தெரிவித்துள்ளது.

இந்த விளக்கக் கோவையில் உள்ள விளக்கங்கள் தற்போது சிந்தனையில் உள்ள விடயங்களே எனவும் அதனால் தொடர்ச்சியாக மக்கள் அமைப்புக்களதும் மக்களதும் கருத்துக்களை உள்வாங்கி அதற்கேற்ப தேவையான மாற்றங்களைச் செய்து-திட்டத்தை முன்னேடுத்துச் செல்வதில் தாம் ஈடுபாட்டோடு உள்ளதாக செயற்குழு மேலும் தெரிவித்துள்ளது.

கேள்வி-பதில் விளக்கம் வடிவிலான இந்த இந்தக் கோவை தமிழிலும் ஆங்கிலத் திலும்-இன்னும் இரண்டொரு நாட்களில் வெளி யாகும் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## வெடிபொரு...

சேர்ந்த சிறிவரதன் லவா (வயது 7) என்ற சிறுவன் உயிரிழந்தான். சகோதரர்களான ஜெகதீஸ்வரன் சாளினி (வயது 8), ஜெகதீஸ்வரன் அகிலன் (வயது 7) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எடுக்கப்பட்ட வெடிபொருளை கல்லினால் குத்திய போதே இவ் அனர்த்தம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தமிழ்ச்செல்...

தடுப்புக்காவலில் வைக் கப்பட்டிருக்கும் தமிழ்ச்செல்வனுக்கு நெருக்கமான புலி முக்கியஸ்தர் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே இப் பெண் புலி உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-5)

Jaffna Technical Institute(JTI)
No. 45, Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING (DCA)
ACCOUNT EXPRESS + TALLY ACCOUNTING
QUICK BOOKS + ASSET MANAGER + PEACHTREE
06.09.2009 | 12.09.2009 | 13.09.2009
காலை : 10.00 மணி
கட்டணம் : 3000 /=
பதிவுக் கட்டணம் இலவசம்
(C-3216)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி (I.C.R.C. சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். T.P. :- 021 222 4333
SCAN, ECG மற்றும் இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
அடிப்படை உடற்பரிசோதனைகள்.
உடல் பருமனுள்ளவர்களைப் பரிசோதிப்பதற்கான
'OBESITY' PACKAGE Rs. 1200 /=
(C-3220)

நியூ சிற்றி ரேடர்ஸ் (இடமாற்றம்)
கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த மேற்படி ஸ்தாபனம் 319 A, கே.கே.எஸ்.வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.சொனி-பனசொனிக்-சொனிக்கா-ரேடியோ, கசற் றெக்கோடர், சொனி-பைனியர்-ஆட்ரெக் கார் ரேடியோ, ஸ்பீக்கர், சொனி-பனசொனிக்-எல்.ஜி கலர் ரிவி (14'',21''), டிஸ் ரிவி, ஈரோகோல்ட் ரிசீவர், இன்டக்ஸ் வூபர்ஸ், பவல்ஸ், வயர், அன்ரனா, பூஸ்ட்டர், கசியோ ஓகன், சுவர் மணிக்கூடுகள், கைமணிக்கூடுகள், காற்பந்து, வொலி போல், கரம்போட், சகல விதமான பற்றிகள், வாட்டர் பில்ரர், பிளாஸ்க், ரோர்ச் மற்றும் அன்பளிப்பு அலங்கார பொருட்களை பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட எலக்ரோனிக் பொருட்களை திருத்திக்கொள்ளவும் நாட வேண்டிய ஒரேஸ்தாபனம்
T.P.:- 021 222 3226 நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(மேற்படி ஸ்தாபனத்திற்கு யாழ்.நகரில் வேறெங்கும் கிளைகள் இல்லை.மேற்படி ஸ்தாபனம் கே.கே.எஸ்.வீதியில் ஸ்ரான்லி றோட் சந்தியிலிருந்து உட்புறமாக ஐந்தாவது கடை.)
(C-3197)

வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்பை நாடிநிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றிவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரியவாய்ப்பு.
வேலை பற்றி
☆ ஒரு மாத பயிற்சிக் காலத்தை உடையது.
☆ இக்காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
☆ பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
☆ பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
அடிப்படைத் தகைமை
☆ G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி.
☆ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 10.09.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.
விளம்பர இல. C-3144
C/O, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(C-3144)

Trinity College And University
(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)
Sri Lankan Division
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணனிக்கற்கை நெறிகள் மானிப்பாயில் ஆரம்பம்!!!
Advanced Diploma in ICT - (ADICT)
Course Modules :-
✓ Information & Communication Technology
✓ Mathematical Foundation
✓ PC Packages & Languages
✓ Website Management & Internet
✓ Computer Graphics
(Durations - 4 Months)
Diploma & Certificate Courses :-
Ms Office
DTP
Website Designing
Auto CAD
Accounting Packages
Internet & e -mail
Mobile Phone Repairing
Computer Hardware Engineering
Etc.......
* இன்று முதல் அனுமதி விண்ணப்பபடிவங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
* உங்கள் பதிவுகளை 10/09/2009ம் திகதிக்கு முன்னர் மேற்க்கொள்ளவும்.
* சான்றிதழ்கள்யாவும் Trinity University இனது இலங்கைக்கான பிரிவினால் வழங்கப்படும்.
எமது நிறுவனத்தில் High Speed Internet Browsing சேவையை அனைவரும் பெற்றுக்கொள்ள முடியும்.
மேலதிக விபரங்களுக்கு :-
UNI
ICT Education Trainers
Manipay
T.P.No :- 060 - 221 - 6433 / 0777 - 110862
(C-3212)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.